விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 003 வள்ளுவர் ஆண்டு 2056 மார்கழி 07 திங்கட்கிழமை (22.12.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## மாகாண சபைத் தேர்தல் குறித்து மோடிக்கு தமிழரசுக் கட்சி கடிதம்

(யாழ்ப்பாணம்)

மாகாண சபைத் தேர்தலை நடத்தாது அநுர அரசாங்கம் தொடர்ந்தும் பின்னடிப்புச் செய்து வரும் நிலையில்தேர்தல்குறித்த அரசுக்கு அழுத்தம் பிரயோகிக்குமாறு பாரதப் பிரதமர் நரேந்திர மோடியை கடிதம் வாயிலாகக் கேட்பதென இலங்கைத் தமிழரசுக் கட்சி தீர்மானித்துள்ளது.

அதனடிப்படையில் நாளை செவ்வாய்க்கிழமை குறித்த கடிதத்தை இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரிடம் நேரில் கையளிப்பதற்குத் திட்டமிட்டமிடப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தில் அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துமாறு 15ஆம் பக்கம் பார்க்க

தையிட்டிப் போராட்டம்

## அத்துமீறிய பொலிஸார் வலுக்கும் கண்டனங்கள்

(யாழ்ப்பாணம்)

தையிட்டியில் நேற்று அகிம்சை வழிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மிலேச்சத்தனமாகக் கைது செய்யப்பட்டமைக்கு எதிராகப் பலரும் தமது கண்டனங்களை வெளியிட்டுள்ளனர்.

அந்த வகையில் ஜனநாயக ரீதியில் போராடியமைக்காக கைது செய்யப்பட்ட வலி.கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் 11ஆம் பக்கம் பார்க்க

## காற்றின் தரம் கணிசமானளவு பாதிப்பு


(கொழும்பு)

வடக்கு மாகாணம் உட்பட நாட்டின் முக்கிய மாகாணங்களில் கடந்த சில நாட்களாக காற்றின் தரம் கணிசமாக வீழ்ச்சியடைந்துள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி அஜித் குணவர்தன தெரிவித்துள்ளார். 15ஆம் பக்கம் பார்க்க

- தையிட்டி விகாரைக்கு எதிராக -

# போராட்டத்தில் ஈடுபட்ட ஐவர் பொலிஸாரால் கைது

சம்பவ இடத்தில் பதற்றம்





(யாழ்ப்பாணம்)

தையிட்டி திஸ்ஸ விகாரைப் பகுதியில் நேற்று முன்னெடுக்கப்பட்ட அகிம்சா வழிப் போராட்டத்தில் பொலிஸாரின் செயற்பாடுகளால் அங்கு பதற்றம் ஏற்பட்டது. இதன்போது பொலிஸார் வேலன் சுவாமிகள் உட்பட ஐவரைக் கைது செய்தமையால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டிருந்தது.

(02ஆம் பக்கம் பார்க்க)

வவுனியாவில்

## மனைவியைக் கொன்ற கணவன் கைது

(வவுனியா)

வவுனியா, கருவேப்பங்குளம் பகுதியில் குடும்பப் பெண் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் அவரது கணவன் கைது செய்யப்பட்டுள்ள 15ஆம் பக்கம் பார்க்க

## பிரதமர் ஹரிணி கிளிநொச்சி விஜயம்

### புளியம்பொக்கணையில் வழிபாடு



(கிளிநொச்சி)

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை உத்தியோகபூர்வ விஜயமாக கிளி 16ஆம் பக்கம் பார்க்க

## தையிட்டி திஸ்ஸ விகாரை பிரச்சினைக்கு துரித தீர்வு

### புத்த சாசன அமைச்சர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தையிட்டி விகாரை பிரச்சினைக்கு, விரைவில் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் என்று புத்தசாசனம், மதம் மற்றும் கலாசார விவகார அமைச்சர் சுனில் செனவி தெரிவித்துள்ளார்.

தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக சட்டவிரோதமாகக் கையகப்படுத்தப்பட் 15ஆம் பக்கம் பார்க்க

2024 உயர்தரப் பரீட்சைப் பெறுபேறு

## முதல் பத்து இடத்தைப் பெற்ற மாணவர்களுக்கு தலா ஒரு இலட்சம்

### பிரதமர் ஹரிணி வழங்கி வைப்பு



(கிளிநொச்சி)

2024ஆம் ஆண்டு கபொத உயர்தரப் பரீட்சையில் மாவட்ட ரீதியில் சாதனை படைத்த மாணவர்களை கௌரவிக்கும் வட மாகாண நிகழ்வானது நேற்று கிளிநொச்சி 15ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் வாள்வெட்டு 19 வயது இளைஞன் பலி

(வவுனியா)

வவுனியா வீரபுரம் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் வவுனியா தவசிகுளத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞர் உட்பட சிலர் நேற்று மாலை வவுனியாவில் இருந்து வீரபுரம் பகுதிக்குச் சென்றுள்ளனர்.

இதன்போது அவர்கள் மீது அந்தப் பகுதியைச் சேர்ந்த குழு ஒன்று தாக்குதல் நடத்தியுள்ளது.

11ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## கிருஷ்ணபிள்ளை கணேசன்

(ஓய்வுநிலை அதிபர் – யா/ அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை)

கொத்தியாவத்தை அல்வாய் வடமத்தியைப் பிறப்பிடமாகவும் கூத்தாடியம்பதி அல்வாய் வடமத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை கணேசன் அவர்கள் கடந்த (20.12.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் கிருஷ்ணபிள்ளை - இலட்சுமி தம்பதியரின் ஏகபுதல்வனும் பொன்னையா - இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் தயாநிதி அவர்களின் அன்புக் கணவவரும் பாரதிதாசன், கண்ணதாசன்(கனடா), காலஞ்சென்ற கௌசல்யா, பிறேமதாசன் (லண்டன்), கல்யாணி ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வராணி, திருச்செல்வி, கவிதா, விநாயகமூர்த்தி(வரதர்) ஆகியோரின் மாமனாரும் கௌமிதா, அனுசன், வினுஜா, விதுசன், தஸ்விதன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2025) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று காலை 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுப்பர்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"பொதிகை" 0777965254, 0774108791 (C-4644)

தகவல்: குடும்பத்தினர்

## போராட்டத்தில் ...

தனியார் காணிகளில் அனுமதியின்றி சட்டவிரோதமாக கட்டப்பட்ட யாழ்ப்பாணம் தையிட்டி திஸ்ஸ ரஜ மகா விகாரை விகாராதிபதியின் பதவியுயர்வை எதிர்த்து வலிகாமம் வடக்கு பிரதேசசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைய நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தையிட்டி திஸ்ஸ விகாரையின் விகாராதிபதி, ஜின் தோட்ட நந்தாராம தேரருக்கு பௌத்த கட்டமைப்பின் உயரிய அதிகாரங்களை வழங்கும் நிகழ்வு, புத்தசாசன, சமயம் மற்றும் கலாசார அமைச்சர் சுனில் செனவி, எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோரின் இணைத்தலைமையில் கொழும்பில் நடைபெற்றது.

அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் வலிகாமம் வடக்கு பிரதேச சபை உறுப்பினர்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மக்களின் காணிகளில் சட்டவிரோதமாக விகாரையை அமைத்த விகாராதிபதிக்குப் பதவி உயர்வு வழங்கும் அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவரின் செயற்பாட்டை கண்டித்தே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்திற்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் பலாலி பொலிஸார் தடையுத்தரவை பெற்றதுடன் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல்வாதிகள் உள்ளிட்ட 29 பேருக்கு எதிராகப் பெயர் குறிப்பிட்டு போராட்டத்தில் ஈடுபடத் தடையுத்தரவையும் பெற்றிருந்தனர்.

இந்நிலையில் போராட்டம் முன்னெடுக்கப்பட்ட வேளை விகாரையை அண்மித்த சூழலில் பெருமளவான பொலிஸார் மற்றும் கலகம் அடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

போராட்டக்காரர்கள் பேரணியாக பதாகைகதைத் தாங்கியவாறு விகாரை வீதியில் செல்ல முற்பட்டவேளை அதனை பொலிஸார் தடுக்க முற்பட்ட போது அங்கு தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

குறித்த போராட்டம் ஒரு அமைதி வழியான போராட்டம். இங்கு எந்த விதத்திலும் பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கப்படவில்லை. விகாரைக்குள் போராட்டக்காரர்கள் செல்லவில்லை. விகாரைக்கு சேதம் விளைவிக்கவில்லை. விகாரைக்கு செல்லும் வீதியை நீங்கள் அடாத்தாக எப்படி மறித்து வைத்திருப்பீர்கள் எனப் பொலிஸாருடன் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

தர்க்கம் தள்ளுமுள்ளாக மாறவே போராட்டத்தில் ஈடுபட்டிருந்த சிவகுரு ஆதின முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராசா நிரோஷ் , வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் மூன்று உறுப்பினர்கள் என ஐந்து பேர் பலாலி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். அதனால் போராட்ட களத்தில் அமைதியின்மை ஏற்பட்டது.

கைதான ஐந்து பேரும் பலாலி பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு வாக்குமூலம் சேகரிக்கப்பட்ட பின்னர் மல்லாகம் நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் காயத்ரி அகிலன் முன்னிலையில் நேற்று மதியம் முற்படுத்தப்பட்டனர்.

கைதான ஐந்து பேரும் ஒரு இலட்சம் ரூபாய் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இவர்கள் மீதான குறித்த வழக்கு 2026 ஜனவரி 26ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ந-7,33)

# நடமாடும் வீட்டில் படமாகிப்போன எம் இதய தெய்வத்தின்

# 20 ஆம் ஆண்டு நினைவலைகள்



## திருமதி ஜெகதாம்பிகை தெட்சணாமூர்த்தி

திதி : வளர்பிறை திருதியை (22.12.2025)

ஈர்பத்து ஆண்டுகள் மறைந்து உருண்டாலும்
உங்கள் உயிர் மூச்சு மறையவில்லையே
ஆயிரம் ஆயிரம் யுகங்கள் ஒழிந்தாலும்
உங்கள் நினைவுகள் ஒழிவதில்லை தாயே!
தலைமகளே எங்கள் தவப்பயன் நீயே அம்மா!
வையகம் போற்ற வாழ்ந்து வானுறையும் தெய்வமதாய்
இயற்கையில் இணைந்து பழுதில்லா புதுமலராய்
என்றும் எம் இதயங்களில் மணம் வீசிய
அன்பு நிறை அம்மாவே!
இருபது ஆண்டுகளானதே உங்களைப் பிரிந்து
தேயாமல் வளருமிது தெய்வீக அன்பு
இயற்கையின் அசைவுகளில்
உங்கள் உணர்வுகளை நுகர்ந்து
உங்கள் பாதங்களுக்கு மலர்தூவி
வணங்குகின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அன்னை மடியில் 23.02.1951

ஆண்டவன் அரவணைப்பில் 02.01.2006


உங்கள் பிரிவால் நினைவில் தவிக்கும்
பிள்ளைகள், மருமகள்மார்
மற்றும் பேரப்பிள்ளைகள்

இல.110, சீனிவாசகம் வீதி, யாழ்ப்பாணம். (1824)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கம் வழங்கும் நிதியை முறையாகப் பயன்படுத்துங்கள்

## மத்திய வங்கி ஆளுநர்



(கொழும்பு)

**அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிவாரண நிதி மற்றும் வங்கிக் கடன்களைப் பெற்றுக்கொள்ளும் போது மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டும் என மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்ததுள்ளார்.**

கண்டியில் நேற்று முன் தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் பெற்றுக்கொள்ளும் கடன் தொகைகள் மற்றும் நிவாரணங்களை முறையாக முகாமைத்துவம் செய்து கொள்வது பொதுமக்களின் கடமையாகும்.

அனர்த்த நிலைமையின் போது பாதிக்கப்பட்டவர்களுக்காக அரசாங்கம் பாரிய நிதியை ஒதுக்கியுள்ளது.

எனவே, பிரஜைகள் என்ற ரீதியில் தமக்குத் தேவையான அளவை மாத்திரம் பெற்றுக் கொள்ளும் பொறுப்பு அனைத்து தரப்பினரிடமும் காணப்பட வேண்டும். இதன் மூலம், தேவையுள்ள ஏனைய தரப்பினருக்கு முறை யான முகாமைத்துவத்தின் கீழ் அந்த நிதியை வழங்கும் ஆற்றல் அரசாங்கத்திற்கு கிட்டும்.

அத்துடன், பெற்றுக்கொள்ளும் நிவாரண நிதியை சரியான முகாமைத்துவத்துடன் பயன்படுத்த வேண்டும். கடந்த காலங்களில் பொருளாதார நெருக்கடி காரணமாக சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்த போது, அத்துறையினருக்கு நிவாரணக் கடன் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இதன்போது பாதிக்கப்பட்ட மற்றும் பாதிக்காத தரப்பினர் என இரு சாராரும் தேவைக்கு அதிகமாக கடன்களைப் பெற்றனர். பின்னர் அக்கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் அந்த வணிகங்கள் நெருக்கடிக்கு முகங்கொடுத்தனர்.

வழங்கப்படும் நிவாரணக் கடன்களைக் கூட தமது வணிகத்திற்குத் தேவையான அளவு மாத்திரம் பெற்றுக் கொள்வதன் மூலம் கடன் நெருக்கடிக்கு ஆளாகாமல் இருக்கலாம். எனவே மக்களின் வாழ்க்கையையும் தொழிலையும் மீட்டெடுக்க அரசாங்கம் வழங்கும் பணத்தை முறையாகப் பயன்படுத்துவது அனைவரின் பொறுப்பாகும் என்றார். (8)



யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய அதிபர் திருமதி.சாந்தினி வாகீசனின் மணிவிழா நேற்றைய தினம் கல்லூரி மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது.



கிளிநொச்சி மாவட்டத்துக்கு நேற்றைய தினம் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்ட பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய வரலாற்றுப் புகழ்பெற்ற புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்துக்கு சென்று விசேட வழிபாடுகளில் ஈடுபட்டார். வழிபாடுகளைத் தொடர்ந்து, மிகவும் பழைமை வாய்ந்த இவ்வாலயத்தின் வரலாற்றுப் பின்னணி, ஐதீகங்கள் மற்றும் ஆலயத்தின் சிறப்புக்கள் குறித்து கேட்டறிந்து கொண்டார்.

(படம்-தேவானந்தன்)





**இலங்கை வங்கியின் திருமுறிகண்டி கிளையும் ஓமந்தை கிளையும் புதிய இடத்தில்**

வியாபாரிகளினதும் வாடிக்கையாளர்களினதும் நன்மை கருதி **இலங்கை வங்கியின் திருமுறிகண்டி கிளையும் ஓமந்தை கிளையும்** புதிய இடங்களில் இன்று திறந்து வைக்கப்படவுள்ளன.

**திருமுறிகண்டி கிளை**
A9 வீதி, திருமுறிகண்டி,
கிளிநொச்சி.
தொலைபேசி: 021 206 0110
மின்னஞ்சல்: boc326@boc.lk

**ஓமந்தை கிளை**
ஓமந்தை மத்திய கல்லூரிக்கு அருகில்,
A9 வீதி, ஓமந்தை.
தொலைபேசி: 024 205 2740
மின்னஞ்சல்: boc362@boc.lk

இணையற்ற வங்கிச் சேவைகளைப் பெற்றுக் கொள்ள எம்மிடம் வாருங்கள்!

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

(E-3666)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுச் செய்திகள்

# இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் தொடர்;

# மீண்டும் அவுஸ்திரேலியா வசமானது

**ஆஷஸ் தொடரின் 3 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 82 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.**




இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியாவிற்கு இடையேயான ஆஷஸ் தொடரின் 3 ஆவது டெஸ்ட் போட்டி அடிலெய்டில் நடைபெற்றது.

நாணய சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணி, துடுப்பாட்டத்தை தேர்வு செய்து முதல் இன்னிங்ஸில் 371 ஓட்டங்களை குவித்தது.

அவுஸ்திரேலிய தரப்பில் அதிக பட்சமாக, விக்கெட் கீப்பர் அலெக்ஸ் கேர்ரி 106 ஓட்டங்களும், உஸ்மான் கவாஜா 82 ஓட்டங்களும் குவித்தனர்.

இங்கிலாந்து தரப்பில் ஜோப்ரா ஆர்ச்சர் 5 விக்கெட்களை வீழ்த்தி அசத்தினார்.

இதனை தொடர்ந்து, தனது முதல் இன்னிங்சை ஆடிய இங்கிலாந்து அணி, 286 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

இங்கிலாந்து தரப் பில் அதிக பட்சமாக அணித்தலைவர் பென் ஸ்டோக்ஸ் 86 ஓட்டங்கள் குவித்திருந்தார்.

அதையடுத்து தனது 2 ஆவது இன்னிங்ஸை ஆடிய அவுஸ்திரேலிய அணி, 349 ஓட்டங்கள் குவித்தது.

அதிகபட்சமாக, விக்கெட் கீப்பர் அலெக்ஸ் கேர்ரி 72 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

435 என்று வெற்றி இலக்குடன் தனது 2 ஆவது இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து அணி, 352 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து ஆட்டமிழந்தது.

இதன் மூலம், அவுஸ்திரேலியா அணி 82 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஏற்கனவே முதல் 2 போட்டிகளில் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றிருந்த நிலையில், இதன் மூலம் 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடரை 3-0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.

அவுஸ்திரேலிய மண்ணில் கடைசியாக விளையாடிய 18 டெஸ்ட் போட்டிகளில் ஒன்றில் கூட இங்கிலாந்து அணி வெற்றி பெறவில்லை.

இரு டெஸ்ட் போட்டிகளை சமன் செய்த இங்கிலாந்து அணி, மீதமுள்ள 16 டெஸ்ட் போட்டிகளிலும் தோல்வி அடைந்தமை குறிப்பிடத்தக்கது. (3)

## கில் வெளியே... சாம்சன் உள்ளே...

# ரி-20 உலக கிண்ண தொடரில் இடம்பிடித்த சஞ்சு சாம்சன்!




பெப்ரவரி 7 முதல் மார்ச் 8 வரை நடைபெறவுள்ள 10 ஆவது ஐ.சி.சி. ரி-20 உலகக் கிண்ணத் தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. சூர்யகுமார் யாதவ் தலைமையிலான அந்த அணியில் 15 வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

அந்த அணியில் துணை கப்டன் சுப்மன் கில் இடம்பெறவில்லை. அவருக்கு பதிலாக அக்சர் படேல் துணை கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன் சஞ்சு சாம்சன் முதன்மை விக்கெட் கீப்பராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். இது ரசிகர்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

ஏனெனில் இந்திய ரி-20 அணியில் தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கி சிறப்பாக ஆடி வந்த சஞ்சு சாம்சனுக்கு சுப்மன் கில்லின் வருகையால் வாய்ப்பு மறுக்கப்பட்டு வந்தது. தற்போது கில் இல்லாததால் ரி-20 உலகக்கிண்ணத்தில் சஞ்சு சாம்சன் தொடக்க ஆட்டக்காரராக களமிறங்குவது உறுதியாகி உள்ளது.

இந்நிலையில் ரி- 20 உலகக் கிண்ணத் தொடருக்கான இந்திய அணியில் தேர்வானது குறித்து சஞ்சு சாம்சன் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ளது வைரலாகி வருகிறது.

அந்தப் பதிவில், *'நிறங்கள் நிச்சயம் மங்காது'* என்ற தலைப்புடன் தனது புகைப்படத்தை இணைத்து பதிவிட்டுள்ளார். இது வைரலாகி வருகிறது. (3)

## இலங்கை கிரிக்கெட் தலைவர்

# பதவியிலிருந்து அசலங்க நீக்கம்

20 ஓவர் உலகக் கிண்ணத் கிரிக்கெட் போட்டிக்கான இலங்கை அணியின் 25 பேர் கொண்ட உத்தேச பட்டியல் நேற்று வெள்ளிக்கிழமை அறிவிக்கப்பட்டது. பொறுப்பில் இருந்து சரித் அசலங்க அதிரடியாக நீக்கப்பட்டார்.


அவரது மோசமான துடுப்பாட்டம் காரணமாக தலைவர் பதவியில் இருந்து விடுவிக்கப்பட்டதாக இலங்கை தேர்வு குழு தலைவர் பிரமோதயா விக்ரமசிங்கா தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் பாகிஸ்தானில் விளையாடிய போது குண்டு வெடித்ததால் பாதுகாப்பு அச்சத்தால் அசலங்க பாதியில் நாடு திரும்பினார்.

அங்கு தொடர்ந்து விளையாடும்படி இலங்கை கிரிக்கெட் வாரியம் அறிவுறுத்தியும் அவர் அதை ஏற்காததே பதவி பறிப்புக்கு காரணம் என்றும் கூறப்படுகிறது.


அவருக்கு பதிலாக ஆல்-ரவுண்டர் தசுன் ஷனகா அணியின் தலைவராக மீண்டும் நியமிக்கப்பட்டு உள்ளார்.

சரித் அசலங்கா ஒரு வீரராக தொடருகிறார். (3)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிரதமர் ஹரிணி அமரசூரிய-யுனிசெப் பிரதிநிதிகள் சந்திப்பு



(கொழும்பு)

அண்மைய பேரழிவால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளை மீண்டும் கட்டியெழுப்புவது குறித்து விவாதிக்க பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கும் யுனிசெஃப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தின் போது, மாணவர்களைப் பாதுகாக்கவும், சேதமடைந்த பாடசாலை அமைப்பை மீட்டெடுக்கவும் அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளை பிரதமர் கோடிட்டுக் காட்டினார். அதே நேரத்தில் மீட்பு செயற்பாட்டில் எதிர்கொள்ளும் சவால்களையும் எடுத்துரைத்தார்.

மண்சரிவு ஏற்படக்கூடிய பகுதிகளில் அமைந்துள்ள பாடசாலைகளை மீண்டும் திறப்பது கடுமையான ஆபத்துகளை ஏற்படுத்தும் என்றும், அறிவியல் மதிப்பீடுகளின் அடிப்படையில் பாதுகாப்பான இடங்களுக்கு இடமாற்றம் செய்வதற்காக அரசாங்கம் அத்தகைய பாடசாலைகளை அடையாளம் கண்டு வருவதாகவும் கூறினார்.

மேலும் பாதிக்கப்பட்ட பாடசாலைகளை இடமாற்றம் செய்தல், உட்கட்டமைப்பை மீட்டெடுப்பது, சில பள்ளிகளை ஒன்றிணைத்து கூட்டாக இயக்குவது, கற்பித்தல் மற்றும் கற்றலை ஆதரிக்க டிஜிற்றல் மற்றும் தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்துதல் மற்றும் சிறப்பு போக்குவரத்து வசதிகளை வழங்குதல் உள்ளிட்ட பல துறைகளில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்

கல்வித் துறையை மீட்டெடுப்பதற்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை யுனிசெஃப் பிரதிநிதிகள் இதன் போது பாராட்டியதுடன், தொடர்ச்சியான ஆதரவையும் உறுதி செய்தனர்.

அதேநேரம், எதிர்கால முயற்சிகளில் இரு தரப்பினரும் இணைந்து பணியாற்றுவது குறித்தும் விவாதித்தனர். (8)

# பண்டிகைக் காலத்தை முன்னிட்டு பொலிஸாருக்கு பகுப்பாய்வு கருவிகள்

(கொழும்பு)

இலங்கை பொலிஸாருக்கு 75 ஆயிரம் புதிய சுவாசப் பகுப்பாய்வு கருவிகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், அவை தற்போது நாடுமுழுவதும் உள்ள அனைத்து பொலிஸ் பிரிவுகளுக்கும் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் உதவி பொலிஸ் அத்தியட்சகருமான எஃப்.யு. வூட்லர் தெரி வித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் கடந்த காலங்களில் நிலவிய சுவாசப் பகுப்பாய்வு கருவிகளுக்கான தட்டுப்பாடு இந்த புதிய தொகுதியின் மூலம் நீங்கும் என அவர் குறிப்பிட்டார்.

மேலும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு வீதிச் சோதனைகள் மற்றும் விபத்து நடந்த இடங்களிலேயே உடனடி சோதனைகளை முன்னெடுக்க இது உதவும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் "கருவிகள் இல்லாத சமயங்களில் சட்டம் நடைமுறைப்படுத்தப்படாது என்று அர்த்தமல்ல. அத்தகைய சந்தர்ப்பங்களில் சந்தேக நபர்கள் சட்ட மருத்துவ அதிகாரி ஒருவரிடம் முன்னிலைப்படுத்தப்படுவார்கள்.

அங்கு பெறப்படும் மருத்துவ அறிக்கையே நீதிமன்றத்தில் சாட்சியாகப் பயன்படுத்தப்படும் எனதெரிவித்துள்ளார். (8)

# சட்டவிரோத சிகரெட்டுக்களுடன் கட்டுநாயக்கவில் ஒருவர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு சிகரெட்டுகளை நாட்டுக்குள் கொண்டு வர முயற்சித்த குற்றச்சாட்டில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ொலிஸ் போதைப்பொருள் அதிகாரிகளுக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைவாக விமான நிலையத்தின் வருகை முனையத்தில் இந்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

இதன்போது, அதிகாரிகள் 210 அட்டைப் பெட்டிகளில் 42 ஆயிரம் சிகரெட்குச்சிகளை பறிமுதல் செய்தனர். சம்பவத்தில் கைதான சந்தேக நபர் அவிசாவளை வீதி, அப்பலபிட்டிய பகுதியைச் சேர்ந்த 21 வயதுடையவர்.

விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு அதிகாரிகள் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (8)


## அகவை அறுபது காணும் மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்



யா/ கோப்பாய் மகா வித்தியாலயத்தில்
10 வருடங்களாக அர்ப்பணிப்புடன்
கடமையாற்றி 22.12.2025 இல்
தனது 60 ஆவது வயதில் ஓய்வு பெறும்
ஆய்வுகூட உதவியாளர்

**செல்வி. நடராசா விக்னேஸ்வரி**

Best Wishes

சேவை விபரம்

- கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை (நோயாளர் அறை உதவியாளர் சேவை) (1991.02.04–1998.08.10)
- 1998.08.10 இலிருந்து ஆய்வுகூட உதவியாளர் சேவை
- யா/இராமநாதன் கல்லூரி (1998.08.10 – 2015.02.16)
- யா/மெமோறியல் ஆங்கில பாடசாலை மானிப்பாய் (2015.02.17–2015.09.28)
- யா/கோப்பாய் மகா வித்தியாலயம் (2015.09.28–2025.12.22)

(6348)

வாழ்த்துவோர்:- அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்
யா/கோப்பாய் மகா வித்தியாலயம்



## வேலைவாய்ப்பு

♦ கணனி தமிழ் ரைப்பிங் மற்றும் பக்க வடிவமைப்பு

அனுபவமுள்ளவர்கள் மற்றும் பயிலுனர்கள்
(பெண்கள் – பகல் கடமை
ஆண்கள் – இரவுக் கடமை)

♦ உதவி ஆசிரியர்கள் (இருபாலாரும்)

தகைமை : க.பொ.த உயர்தரம்

யாழ். நகருக்கு அண்மித்து இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**076 097 3121, 021 222 3378**

வலம்புரி நாளிதழ்,
இல.191, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

தோற்றம் 28 - 04 - 1949



மறைவு 21 - 12 - 2025

### பேராசிரியர் மார்க்கண்டு கருணாநிதி

அல்வாய் தெற்கு கொக்கட்டியாவளவினை பிறப்பிடமாகவும், கொழும்பு 15, விஸ்வைக் தொடர்மாடியை வசிப்பிடமாகவும் தற்போது வதிரி பிரசாந்தியில் வசித்த பேராசிரியர் மார்க்கண்டு கருணாநிதி அவர்கள் நேற்று 21.12.2025 ஞாயிற்றுக்கிழமை காலை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு-செல்லம்மா தம்பதியினரின் பாசமிகு புதல்வனும், காலஞ்சென்றவர்களான சினித்தம்பி-நவரத்தினம் தம்பதியினரின் பாசமிகு மருமகனும், சகுந்தலாவின் அன்புக் கணவரும், பிரசாந்தன் (கனடா), நிவேதித்தன் (UK), காயத்திரி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், காலஞ்சென்ற திருமதி மகாமலர் மற்றும் கிருஸ்ணபிள்ளை, திருமதி கருணாவதி தணிகாசலம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற கவிஞர் மு.செல்லையாவின் தந்தைவழி மருமகனும், காலஞ்சென்ற வடிவேலுவின் அருந்துரை தாய்வழி மருமகனும், சோபிதா (கனடா), மாதங்கி (UK) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற இராஜநாதன், சித்தறஞ்சன், கௌசல்யா (UK), ரவீந்திரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், ஹர்சவி, சஸ்வின், வருண், யாத்ரா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

இறுதிக்கிரியைகள் நாளை 23.12.2025 செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு அன்னாரது வதிரி பிரசாந்தி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்வாய் பங்குவேம்படி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை ஆழ்ந்த துயரத்துடன் தெரியப்படுத்துகின்றோம்.

தொடர்புகளுக்கு
பிரசாந்தன் (மகன்) 076 780 3432
நிவேதித்தன் (மகன்) 076 272 9158

(1825)

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## வானில் வட்டமிட்ட சீன போர் விமானங்கள்
## எச்சரிக்கை விடுத்த தாய்வான்

### அதிகரிக்கும் போர் பதற்றம்

(இஸ்லாமாபாத்)

**தாய்வான் எல்லையில் வலம் வரும் போர்க்கப்பல் மற்றும் போர் விமானங்களினால் அப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.**



கிழக்காசியாவில் தென் சீன கடல், கிழக்கு சீன கடல் மற்றும் பிலிப்பைன்ஸ் கடல் ஆகியவற்றிற்கு மத்தியில் இருக்கும் தீவுதான் தாய்வான்.

1949இல் சீனாவின் கட்டுப்பாட்டிலிருந்து தாய்வான் தனிநாடாக பிரிந்து சென்றது. ஆனாலும் சீனா தாய்வானை தனது ஒருங்கிணைந்த பகுதியாகவே பார்த்து வருகிறது.

ஆனாலும் தனி நாடாக தங்களுக்கென தனி இறையாண்மை உள்ளது எனக் கூறி தாய்வான் அதனை மறுத்து வருகிறது.

இவ்வாறான பின்னனியில் தாய்வான் எல்லையில் அவ்வப்போது போர்க்கப்பல்கள், விமானங்களை அனுப்பி சீனா பதற்றத்தைத் தூண்டியுள்ளது.

இந்நிலையில் தாய்வான் பாதுகாப்புத்துறை வெளியிட்ட எக்ஸ் தளப்பதிவில் , தாய்வானை சுற்றி சீனாவின் 7 விமானங்களும், 11 கடற்படை கப்பல்களும் ரோந்து வந்ததை உறுதி செய்துள்ளது.

மேலும் அவர்களின் ஆயுதப்படைகள் நிலவரத்தை கண்காணித்து உடனடியாக தகுந்த நடவடிக்கை எடுத்ததாகவும் குறிப்பிட்டுள்ளது.

சீனாவின் அத்துமீறலை தொடர்ந்து கண்காணித்து வரும் தாய்வான் மக்களுக்கு இடையூறு ஏற்பட்டால் பொறுத்துக் கொள்ள மாட்டோம் என தாய்வான் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

சீனாவின் இந்த செயலால் கிழக்காசியப் பகுதியில் போர் பதற்றம் நிலவி வருகிறது.

சீனா தாய்வானை ஒரு போதும் பிரிக்க முடியாத பகுதி என்று கருதி வருகிறது. எனவே தான் தாய்வானை அடிக்கடி அச்சுறுத்தி, அதன் சுயாட்சியை மிரட்டுவதற்காக, அடிக்கடி தாய்வானைச் சுற்றி இராணுவப் பயிற்சிகளை நடத்துகிறது.

இதில் விமானங்கள், போர்க்கப்பல்கள், ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகள் மூலம் சுற்றி வளைப்பதும், அதன் விமான பாதுகாப்பு மண்டலத்தில் ஊடுருவுவதும், போர் ஒத்திகைகள் செய்வதுமாக அந்தப் பகுதியில் எப்போதும் பதற்றத்தை அதிகரித்து வருகிறது.

அதேவேளை, தீவுநாடான தாய்வானுக்கு அமெரிக்கா ஆதரவு அளித்து வருகிறது. தாய்வானுக்கு அதிக அளவில் அமெரிக்கா ஆயுதங்களை விற்பனை செய்து வருவதுடன் சீனா படையெடுக்கும் பட்சத்தில் தாய்வானை பாதுகாப்போம் என அமெரிக்கா தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (3)

## பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கானுக்கு மீண்டும் சிறை!



(இஸ்லாமாபாத்)

ஊழல் வழக்கில், பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மற்றும் அவரது மனைவி புஷ்ரா பீபிக் ஆகிய இருவருக்கும் 17 ஆண்டுகள் சிறைத் தண்டனையை பாகிஸ்தான் நீதிமன்றம் விதித்துள்ளது.

முன்னாள் பிரதமர் இம்ரான் பதவியில் இருந்த போது, தமக்கு கிடைத்த பரிசு பொருட்களை அரசு நிதியில் சேர்க்காமல் மனைவியுடன் சேர்ந்து விற்பனை செய்து சொத்துகள் சேர்த்ததாக குற்றச்சாட்டு எழுந்தது.

இது தவிர மேலும் பல வழக்குகள் அவர் மீது தொடுக்கப்பட்டன. அதில் பாகிஸ்தான் தூதரகம் அனுப்பிய இரகசிய தகவல்களை கசியவிட்டதாக தொடரப்பட்ட வழக்கில் இம்ரான் கானுக்கு 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இதையடுத்து, அவர் அடியாலா சிறையில் தண்டனை அனுபவித்து வருகிறார்.

இந்நிலையில், சவுதி மன்னரிடம் பரிசுப்பொருளாக நகை பெற்றது தொடர்பான 2 ஆவது ஊழல் வழக்கில், இம்ரான்கான் மற்றும் அவரது மனைவி புஷ்ரா பீபி ஆகியோருக்கு நம்பிக்கை மோசடி செய்ததற்காக 7 ஆண்டுகள், ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் 10 ஆண்டுகள் என மொத்தம் 17 ஆண்டுகள் மேலும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதோடு, தலா 1.64 கோடி ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. (3)

## வெனிசுலா கடற்பரப்பில் மீண்டும் எண்ணெய் கப்பல் பறிமுதல்

### எச்சரிக்கும் அமெரிக்கா

(கராகஸ்)

வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ மீது ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வரும் நிலையில், இரண்டு வாரங்களுக்குள் இரண்டாவது முறையாக அமெரிக்கப் படைகள் வெனிசுலா கடற்கரையில் ஒரு எண்ணெய்க் கப்பலை சனிக்கிழமை தடுத்து நிறுத்தின.

தென் அமெரிக்க நாட்டிற்குள் வந்து வெளியேறும் அனைத்து தடைசெய்யப்பட்ட எண்ணெய்க் கப்பல்களையும் முற்றுகையிடுவதாக ட்ரம்ப் அறிவித்த சில நாட்களுக்குப் பின்னர் கடந்த டிசம்பர் 10 ஆம் திகதி வெனிசுலாவின் கடற்கரையில் ஒரு எண்ணெய் கப்பலை அமெரிக்கப் படைகள் கைப்பற்றியிருந்தன.



இந்த நிலையில் இரண்டாவது எண்ணெய்க் கப்பல் நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலை தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

வெனிசுலாவில் இறுதியாக நிறுத்தப்பட்டிருந்த செஞ்சுரியஸ் என்ற எண்ணெய் டேங்கரை அமெரிக்க கடலோர காவல்படை பாதுகாப்புத் துறையின் உதவியுடன் தடுத்து நிறுத்தியதாக வோஷிங்டனின் உள்நாட்டுப் பாதுகாப்புச் செயலாளர் கிறிஸ்டி நோயம் உறுதிப்படுத்தினார்.

அமெரிக்க ஹெலிகொப்டரிலிருந்து குறித்த கப்பலில் பணியாளர்களுடன் தரையிறக்கும் வீடியோவையும் அவர் சமூக ஊடகங்களில் வெளியிட்டார். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தெரிவு செய்யப்பட்ட நலிவுற்ற குடும்பங்களுக்கு

# தேசிய லொத்தர் சபையினால் நுளம்பு வலைகள் வழங்கி வைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் பிரதேச வைத்தியசாலையை அண்மித்து ஏராளமான வறிய குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில், கடந்த காலத்தில் அந்த பிரதேசத்திலுள்ள மக்களில் பலர் டெங்கு மற்றும் சிக்குன் குனியா போன்ற நோய்களினால் பாதிக்கப்பட்டிருந்தனர். இந்நோய்களிலிருந்து அம்மக்களைப் பாதுகாப்பதற்காக மானிப்பாய் பிரதேச வைத்தியசாலையின் நலன் புரிச்சங்கத்தின் வேண்டுகோளுக்கமைய குறித்த வைத்தியசாலைக்கு சிகிச்சை பெற வரும் நோயாளர்களில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு தேசிய லொத்தர் சபையின் அனுசரணையுடன் நுளம்பு வலைகள் வழங்கும் நிகழ்வு நேற்றைய தினம் இடம் பெற்றது.



குறித்த நிகழ்வில் தேசிய லொத்தர் சபையின் பணிப்பாளர் ரஞ்சித் நாணயக்கார, யாழ்.மாவட்ட மானிப்பாய் பிரதேச வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி எ.காந்தி நேசன், மானிப்பாய் பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் அரியரத்ன, தேசிய லொத்தர் சபையின் பிராந்திய முகாமையாளர் எஸ். பாரதன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தேசிய லொத்தர் சபையின் பணிப்பாளர் ரஞ்சித் நாணயக்கார உரையாற்றுகையில், தேசிய லொத்தர் சபையானது அதன் ஆரம்ப காலத்திலிருந்து மக்களின் பணத்தை மக்களுக்கே வழங்கி வருகின்றது.

அதில் ஒரு தொகை பரிசுப் பணமாகவும் மற்றொரு தொகை மக்களுக்கான நலத் திட்டங்களுக்காகவும் வழங்கப்படுகின்றன.

மானிப்பாய் பிரதேச வைத்தியசாலையின் பௌதீக வளங்கள் தொடர்பில் நாம் அதிக கரிசனை எடுத்து மேலும் பல செயற்றிட்டங்களைச் செய்ய முனைப்புடன் இருப்பதாகத் தெரிவித்த அவர், அண்மையில் தேசிய லொத்தர் சபையின் 13 கோடி பரிசுத் தொகை வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு வீழ்ந்திருந்தையும் நினைவு கூர்ந்திருந்தார்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினரால் மரம் நாட்டும் நிகழ்வும் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் பயனாளிகள், கிராம சேவகர்கள், வைத்தியசாலைப் பணியாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-8-104)








வலம்புரிப் பத்திரிகைக்கான கீதத்தை ஆக்கி அதை இசையமைத்துத் தந்த ஆசிரியர் நவாலியூர் சாந்தகுமார் அவர்கள் நேற்று முன்தினம் வலம்புரி அலுவலகத்தில் வைத்துக் கௌரவிக்கப்பட்ட போது...





வடக்கு மாகாண மகளிர் விவகாரம் மற்றும் வர்த்தக வாணிப அமைச்சினால் யாழ்.மாவட்டத்தில் பிரதேச செயலாளர்களின் சிபாரிசின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட பெண் தலைமைத்துவ மற்றும் சிறிய தொழில் முயற்சியாளர்கள் உள்ளிட்ட 80 பயனாளர்களுக்கான வாழ்வாதார உதவித்திட்டம் வழங்கும் நிகழ்வானது நேற்று முன்தினம் சனிக்கிழமை வடமாகாண தொழில்துறை திணைக்களத்தில் அமைச்சின் செயலாளர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெற்றது.



(C-367)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னாரில் கொத்துரொட்டி அழிப்பு



(மன்னார்)

உணவகம் ஒன்றில் கொத்து தயாரிக்க பயன்படும் மூலப்பொருளான ரொட்டியினை யூரியா பாக் ஒன்றில் சுருட்டி கொத்து தயாரிப்பதற்கு வைக்கப்பட்டிருந்த நிலையில் சுகாதார துறையினரால் அழிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மூர் வீதியில் அமைந்துள்ள உணவகம் ஒன்றில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நடவடிக்கையின் போதே குறித்த சம்பவம் பதிவாகியுள்ளது.

குறித்த உணவகம் அனுமதி இன்றி இயங்கி வந்ததுடன் உணவகத்தில் பணிபுரியும் நபர்கள் சுகாதார அனுமதி பெற்றுக் கொள்ளாமை கண்டறியப்பட்டது.

அத்துடன், குறித்த உணவகத்தில் அசுத்தமான முறையில் உணவுகள் தயாரிக்கப்பட்டமை, உணவுகள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை, கழிவு நீர் ஒழுங்காக வெளியேற்றப்படாமை, உணவு தயாரிப்பவர்கள் கையுறை, தலையுறை பயன்படுத்தாமை போன்ற பல்வேறு சுகாதார குறைபாடுகள் அடையாளப்படுத்தப்பட்ட நிலையில், குறித்த உணவகத்துக்கு எதிராக பல்வேறு பிரிவுகளில் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-285)

## சுகாதார குறைபாடுகளுடன் உணவகங்கள் 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா தண்டம்

(கரணவாய்)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக் குட்பட்ட பருத்தித்துறை நகர்ப்புறத்தில் உள்ள வியாபார நிலையங்கள் மற்றும் உணவு கையாளும் நிலையங்கள் பருத்தித்துறை மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது சுகாதார குறைபாடுகளுடன் இயங்கிய 6 உணவக உரிமையாளர்கள் மற்றும் உணவு கையாளுபவர்களிற்கு எதிராக பருத்தித்துறை நகர சபையின் பொதுச் சுகாதார பரிசோதகர் ப.தினேஷினால் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கானது கடந்த 20 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வேளை உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் தம் மீதான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா தண்டப்பணம் மன்றினால் அறவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (8-60)

## பண்டிகைக்கால வியாபார நிலையங்கள் மன்னார் நகரசபைக்கு 4 கோடி வருமானம்

### மன்னார் நகரசபை தவிசாளர் தெரிவிப்பு

(மன்னார்)

மன்னார் நகர எல்லைக்குள் நத்தார், புதுவருட பண்டிகை கால வியாபார நடவடிக்கைகளுக்கு கடைகள் அமைக்க ஏல விற்பனை மூலம் இடம் வழங்கப்பட்டது. இந் நிலையில் நகர சபைக்கு சுமார் 4 கோடிக்கும் அதிகமான வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளதாக மன்னார் நகர சபையின் தவிசாளர் டானியல் வசந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று சனிக்கிழமை மன்னார் நகர சபையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், மன்னார் நகர சபையினால் 2025 ஆம் ஆண்டுக்கான பண்டிகைக்கால வியாபார நிலையங்களை அமைத்து வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏல விற்பனை மூலம் இடம் வழங்கப்பட்டது.மன்னார் நகரசபை பிரிவில் 339 தற்காலிக வியாபார நிலையங்களை அமைக்க இடம் அடையாளம் காணப்பட்டது.

அதில் 284 கடைகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை வரை ஏல விற்பனை செய்யப்பட்டுள்ளது.அதன் ஊடாக மன்னார் நகரசபைக்கு 4 கோடியே 85 ஆயிரத்து 866 ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது.

மேலும் 55 கடைகள் ஏல விற்பனைக்கு செல்ல உள்ளது. அதனூடாக வருமானம் கிடைக்கும் என எதிர்பார்க்கின்றோம்.குறித்த வருமானங்களை வைத்துக் கொண்டு மன்னார் நகர சபை பிரிவில் மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த குறித்த நிதி 2026 ஆம் ஆண்டு பாதீட்டில் பயன்படுத்தப்பட உள்ளது.

மன்னார் மாவட்டத்தில் அனர்த்த நிலை ஏற்பட்ட போது நகர சபைக்கு வருமான இழப்பு ஏற்படும் என்ற நிலை ஏற்பட்டிருந்தது.ஆனால் கடந்த காலங்களை விட வெளிப்படைத் தன்மையுடன் ஏல விற்பனை இடம் பெற்றமையால் இம் முறை 4 கோடிக்கும் மேற்பட்ட வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவித்தார். (நி-8-285)

# பிள்ளைகளை கலைத்துறைகளில் ஈடுபடுத்த வேண்டும்

### யாழ்.அரச அதிபர் பிரதீபன்

**(யாழ்ப்பாணம்)** பெற்றோர்கள் தமது பிள்ளைகளைக் கலைத் துறைகளில் ஈடுபடுத்த வேண்டும் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார்.



"எண்ணம் நிறைந்த ஓவியம் - சித்துவிலி சித்தம்" தேசிய ரீதியான போட்டியில் மாவட்ட மட்டத்தில் சித்திரம், பதாதை மற்றும் கார்ட்டூன் போட்டிகளில் வெற்றி பெற்ற வெற்றியாளர்களுக்குப் பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த 18 ஆம் திகதி வியாழக்கிழமை யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

மாணவர்களிடம் கலை ஆர்வம் குறைவடைந்துவருவதாகவும், இவ்வாறான ஓவியப் போட்டிகள் மாணவர்களின் திறமைகளை வெளிப்படுத்துவதுடன், அவர்களின் உணர்வுகளை வெளிப்படுத்துகின்றது எனவும், குறிப்பிட்டார்.

அத்துடன் இன்றைய சூழலின் போக்கு மாற்றமடைந்து வருவதாகவும் ஆதலால், சிறுவர்களை நாளை நல்ல மனிதர்களாக உருவாக்க வேண்டிய பொறுப்பு அனைவரிடமும் உள்ளது. பெற்றோர்கள் தமது பிள்ளைகளை கலைத்துறைகளில் ஈடுபடுத்த வேண்டும். இதன் ஊடாக மாணவர்களின் மனம் இயல்பாகவே ஆற்றுப்படுத்தப்பட்டு, எதிர்காலத்தில் ஒளிமயமான வாழ்க்கையினை நோக்கிச் செல்ல கலைகள் முதன்மையாக விளங்குவதாகவும் தெரிவித்தார்.

மேலும், தற்போதைய சமூகம் எதனைச் செய்தாலும் எதிர்க்கும் மனோபாவம் ஓங்கியிருப்பதாகவும், முட்டுக்கட்டை போடுவதும் கவலையளிப்பதாகவும், பிள்ளைகளின் உணர்வுகளுக்கும் மதிப்பளிக்க வேண்டியது அவசியம் எனவும் தெரிவித்தார். (8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 1000 | 800 | 800 | 800 | 900-1150 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 250 | -- |
| பச்சைமிளகாய் | 1300 | 1300 | 1200 | 1100 | 1000-1200 |
| தக்காளி | 600 | 600 | 600 | 800 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 200 | 150 | 160-180 |
| கோவா | 350 | 350 | 300 | 400 | 250 |
| கரட் | 400 | 330 | 300 | 400 | 350 |
| பூசணி | 120 | 140 | 100 | 150 | 120 |
| புடோல் | 350 | 450 | 300 | 400 | 550 |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 200 | 70-120 |
| சின்ன வெங்காயம் | 300 | 250-300 | 300 | 400 | 200-350 |
| பெரிய வெங்காயம் | 250 | 220 | 250 | 250 | -- |
| பாகற்காய் | 1400 | 1700 | 1500 | 2000 | 1400 |
| வெண்டக்காய் | 350 | 250 | 300 | 600 | 250-300 |
| கருணைக்கிழங்கு | 300 | 260 | 300 | 400 | 200 |
| பயற்றங்காய் | 800 | 750 | 600 | 1000 | 900-1100 |
| லீக்ஸ் | 400 | 350 | 250 | 400 | 350 |
| பீற்றூட் | 500 | 500 | 500 | 800 | 400 |
| கறிமிளகாய் | 800 | 1000 | 1200 | 1200 | 1000 |
| முருங்கைக்காய் | -- | -- | 2000 | -- | 2000 |
| போஞ்சி | 800 | 600 | 1000 | 800 | 700 |
| கத்தரிதம்புள்ள | 800 | 700 | 500 | 700 | -- |
| கீரை - 1 பிடி | 150 | 200-250 | 200 | 150 | 180 |
| தேசிக்காய் | 600 | 800 | 400 | 400 | 300-850 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 120-180 | 70-170 |
| இராசவள்ளி | 800 | 700 | 600 | 600 | 480 |
| வெங்காயப்பூ | -- | 900 | 600 | 800 | 800 |
| முள்ளங்கி | 300 | 350 | 200 | 400 | 120 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 200 | 80 | -- |
| வல்லாரை | 60 | 70 | 100 | 150 | -- |
| ஈரப்பலா | 100 | 100-150 | 100 | 200 | 50-80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரயில் பயணச்சீட்டுக் கட்டணம் மீளப்பெறும் வசதிகள் விரைவில்

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க

**(கொழும்பு)**

**தொடருந்து பயணச்சீட்டு கட்டணத்தை மீளப் பெறும் வசதிகள் விரிவுபடுத்தப்படும் என போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

அவர் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் இதனை அறிவித்துள்ளார்.

இதன்படி எதிர்வரும் 25ஆம் திகதி முதல் இந்த புதிய வசதிகள் அமுலுக்கு வரவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரையில் தொடருந்து பயணச்சீட்டுகளுக்கான கட்டணத்தை மீளப்பெறும் வசதி கொழும்பு கோட்டை மற்றும் மருதானை தொடருந்து நிலையங்களில் மட்டுமே செயல்பாட்டில் இருந்து வருகிறது.

இந்தநிலையில், டிசம்பர் 25 முதல் பதுளை, எல்ல, பண்டாரவளை, ஹப்புத்தளை, நானுஓயா மற்றும் ஹற்றன் ஆகிய இடங்களில் குறித்த வசதி கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அநுராதபுரம், யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும் சோதனை அடிப்படையில் பணத்தை மீளப் பெறும் சேவைகள் அறிமுகப்படுத்தப்படும் என குறிப்பிட்டுள்ளார். (8)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு :1995 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 32
உயரம்: 6"
தகைமை/தொழில்: A/L, Bank Officer
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/16341

பிறப்பு:1989 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
11 இல் சூரி செவ்
கி.பா: -11 3/4
உயரம்:5'11"
தகைமை/தொழில்- BSC,MSC,Canada
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/16342

பிறப்பு:1992 இந்து
நட்சத்திரம்:கேட்டை
உயரம்:5'8"
தகைமை/தொழில: Electrician
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்கள்
தொ.இ: B/16345

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
2 இல் செவ்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: Business(own)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16347

பிறப்பு: 1994 NRC
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: Software Engineer, Business(own)
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/16348

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1999 இந்து
நட்சத்திரம: பூசம்
கி.பா:22 1/4
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: MLS(final year)
எதிர்பார்ப்பு: Engineer, Doctor
தொ.இ: G/16373

பிறப்பு: 2000 இந்து
நட்சத்திரம்: பூசம்
12 இல் செவ்
கி.பா: 26
உயரம்: 5'4"
தகைமை/ தொழில்:A/L
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்கள்
தொ.இ: G/16377

பிறப்பு: 1988 RC
உயரம்: 5"
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/16378

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்:கார்த்திகை
2 இல் செவ்
உயரம்: 5'3"
தகைமை/தொழில் -BSc, Audiologist
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/16381

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 18 ¼
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BSC, MSC, PHD, Lecturer
எதிர்பார்ப்பு : தகுதியான ஆண்
தொ.இ: G/16385

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 503



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இயேசுவின் இருப்பிடம்!

அது ஒரு சின்ன கிராமம். அங்கே ஒரு பள்ளிக்கூடம். அதிலே நிறையப் பிள்ளைகள் படித்துக் கொண்டிருந்தார்கள்.

ஒவ்வொரு வருடமும் கிறிஸ்மஸ் விடுமுறை வரும். அதற்கு முன்னாடி கிறிஸ்து பிறப்பு விழாவை கொண்டாடுவது வழக்கம்.

அது எப்படி என்றால் பிள்ளைகள் எல்லோரும் ஒவ்வொரு வேடம் போட்டுக்கொண்டு நாடகம் நடித்துக் காட்டுவது வழக்கம்.

மாதா, சூசையப்பர், ஆடு மேய்ப்பவர்கள், மூன்று ராஜாக்கள், காபிரியேல் தூதர் இப்படி எல்லோரும் அதிலே வருவார்கள்.

காபிரியேல் தூதர் வானத்திலே தோன்றுவார்.

உங்களுக்காக இறைவன் மனுவாக அவதரித்துள்ளார் அப்படி என்று சொல்லுவார். வானத்திலே வால் நட்சத்திரம் தோன்றும். மூன்று ராஜாக்கள் பின் தொடர்ந்து வருவார்கள். இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் மேடையிலே நடித்துக் காட்டுவார்கள் மாணவர்கள்.

இப்படி ஒவ்வொரு வருடமும் கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாடுவது வழக்கம். அதுமாதிரி கொண்டாடுவதற்கு வேண்டிய முன்னேற்பாடுகள் எல்லாம் நடந்து கொண்டிருந்தது. யார் யாருக்கு என்னென்ன வேடம் அப்படி என்பதை எல்லாம் ஆசிரியர்கள் முன்கூட்டியே முடிவு செய்தார்கள்.

ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு "கதாப்பாத்திரம்" கொடுத்து விட்டார்கள்! அந்த வகுப்பிலேயே மக்கு மாணவன் ஒருவன் இருந்தான். விளையாட்டிலே கூட மற்றைய மாணவர்கள் அவனை சேர்த்துக் கொள்வதில்லை. அப்படிப்பட்ட மாணவன்.

அவனுக்கும் ஒரு வேடம் கொடுக்க வேண்டும். என்ன வேடம் கொடுப்பது அவனுக்கு என்று எல்லோரும் யோசனை செய்தார்கள் கடைசியா க ஆசிரியர் சொன்னார்:

"இதோ பார்... நீ என்ன செய்ய வேண்டும் என்றால் சூசையப்பரும் மாதாவும் ஒவ்வொரு விடுதியாக இடம் கேட்டுக்கொண்டு உன்னிடம் வருவார்க்ள. நீ விடுதிக்குள்ளேயிருந்து வெளியே வந்து "இங்கே இடமில்லை!" என்று சொல்ல வேண்டும். அவ்வளவுதான் உன் வேலை!" அப்படி என்றார்.

"சரி" என்று தலையாட்டினான் அந்தப் பையன். தினமும் தவறாமல் ஒத்திகை நடந்தது. எல்லாம் முறையாக நடந்தது. விழா நாள் வந்து சேர்ந்தது. கூட்டத்திலே இருக்கின்ற எல்லோரும் மேடையை ஆர்வமாய் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

நிறைமாத கர்ப்பிணியான தேவமாதாவை அழைத்துக் கொண்டு வந்து சூசையப்பர் ஒவ்வொரு விடுதியிலேயும் இடம் கேட்கிறார். நமது மக்குப் மாணவனிடமும் வருகிறார். இடம் கேட்கிறார். இவன் பதில் சொல்ல வேண்டும் தானே "இடம் இல்லை" என்று சொல்லவில்லை பேசாமல் அவர்களைப் பார்த்துக்கொண்டே நிற்கிறான்.

மேடைக்குப் பின்னாடி நின்று கொண்டிருந்த ஆசிரியர். இவன் பேச வேண்டிய வசனத்தை எடுத்துக் கொடுக்கிறார். இங்கே இடமில்லை.. சொல்லு... இங்கே இடமில்லை. அப்படி என்று மெதுவாக சொல்கிறார்.

இவன் அப்போதும் ஒன்றும் சொல்லாமல் நிற்கிறான். கூட்டத்திலே சலசலப்பு. எல்லோரும் சிரிக்கிறார்கள்.

மாதாவுக்கும் சூசையப்பருக்கும் என்ன செய்வது என்று புரியவில்லை. தவிக்கிறார்கள்

கடைசியாக பையன் வாயைத் திறந்தான். "ஐயா...! இங்கே இடமில்லை. ஆனால் எங்கள் வீட்டுக்கு வாருங்கள் அங்கே நிறைய இடம் இருக்கிறது!" அப்படி என்றான் கண்ணைத் துடைத்துக் கொண்டே!

பார்த்தால் அவன் கண்கள் கலங்கியிருக்கிறது. நிஜமாகவே அழுது விட்டான்! அதனாலேதான் அவனுக்கு வார்த்தை வரவில்லை! கூட்டத்திலே சிரித்தவர்கள் எல்லாம் அப்படியே மௌனமாகி விட்டார்கள்.

தன்னையே மனுவாகத் தந்த இயேசு கிறிஸ்துவுக்கு உண்மையான பிறப்பிடம் இது மாதிரி கள்ளமில்லாத உள்ளங்கள்தான்!

இது உண்மையாக நடந்த ஒரு நிகழ்ச்சி அப்படி என்று என்னிடம் ஒரு சகோதரி சொன்னார்! அவர்களே ஒரு வேடிக்கை கதையையும் சொன்னார்கள்... அது என்னவென்றால், ஒரு பத்து இளைஞர்கள், ஒரு மதகுருவிடம் மன்னிப்புக்காக வந்தார்கள்! அவர் ஒவ்வொருத்தராக கூப்பிட்டு பாவ சங்கீர்த்தனம் (Confession) கேட்டுக் கொண்டிருக்கிறார்.

முதலிலே ஒரு பையன் வந்தான். "ஃபாதர்...நான் ஒரு மட்டையைத் தூக்கி கிணற்றிலே போட்டு விட்டேன்... என் பாவத்தை மன்னியும்!" என்றான்.

அடுத்தவன் வந்தான். "நானும் அந்த மட்டையைத் தூக்கி ஒருதரம் கிணற்றிலே போட்டேன்! என்னையும் மன்னியும்!" என்றான்.

அடுத்தவன் வந்தான். அவனும் இதையே சொன்னான். 9 பேரும் வரிசையாக வந்து இதே விடயத்தைச் சொல்லி மன்னிப்பு கேட்டார்கள்.

கடைசியாக பத்தாவது பையன் ஃபாதர் முன்னாடி வந்து நின்றான். ஃபாதர் பார்த்தார். "ஏன்பா.. நீயும் மட்டையைத் தூக்கிக் கிணற்றிலே போட்டியா?" என்றார்.

"இல்லை ஃபாதர். மட்டையே நான்தான். என்னைத்தான் அந்த 9 பேரும் கிணற்றிலே தூக்கிப் போட்டார்கள்!" அப்படி என்றான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் 4

காவியத் தொடர் 938





வழிவழியாக வந்த இராஜ்யத்தைப் பங்கிட்டுக் கொள்வதும் ஒன்றுதான் தாலி கட்டிய மனைவியை பங்கிட்டுக் கொள்வதும் ஒன்றுதான்! கிழவர்களாகிய உங்களுக்கு அது சம்மதமாயிருக்கலாம்! எனக்குச் சம்மதம் இல்லை! என்று கரிகாலன் கூறியபோது பெரிய பழுவேட்டரையரின் கண்களில் தீப்பொறி பறந்தது. அவர் கொதிப்புடன் எழுந்து நின்றார். உடைவாளை உறையிலிருந்து எடுப்பதற்கும் ஆயத்தமானார்.

அச்சமயத்தில் கரிகாலன் "பாட்டா! என்ன, இதற்குள் எழுந்து போகப் பார்க்கிறீர்கள்? என்னுடைய யோசனையை முழுதும் கேட்டு விட்டுப் போங்கள். சோழ ராஜ்யத்தைப் பிரிப்பதற்கு எனக்குச் சம்மதமில்லை. என் குலத்து முன்னோர்களும், நீங்களும் உங்கள் முன்னோர்களும் ஐந்து தலைமுறையாகப் பாடுபட்டு எத்தனையோ வீராதி வீரர்களின் உயிர்களைப் பலி கொடுத்துச் சோழராஜ்யம் இந்த நிலைமைக்கு வந்திருக்கிறது. இதை இரண்டாகப் பிரித்துச் சிறிய பகுதிகளாக்குவது பாவமாகும். வீர சொர்க்கத்திலுள்ள இராஜாதித்தர் முதலிய நம் முன்னோர்கள் நம்மைச் சபிப்பதற்கு ஏதுவாகும். ஆகையால் அந்த யோசனையை விட்டுவிடுங்கள். இந்தப் பெரிய சோழ ராஜ்யம் முழுவதையும் மதுராந்தகனுக்கே விட்டுக் கொடுத்துவிட நான் ஆயத்தமாயிருக்கிறேன். அதற்கு நியாயமும் உண்டு. என் பெரிய பாட்டனாரின் மகன் மதுராந்தகன். ஆகையால் என் தந்தைக்குப் பதிலாகவே மதுராந்தகனுக்குப் பட்டம் கட்டியிருக்க வேண்டும். பராந்தகச் சக்கரவர்த்தியின் ஏற்பாட்டினால் என் தந்தை முடிசூட்டிக் கொள்ள வேண்டியதாயிற்று. அந்தத் தவறு அவரோடு போகட்டும். 'தந்தைக்குப் பிறகு மகன்' என்ற நியதிப்படி எனக்கு இந்த ராஜ்யத்தின் பேரில் பூரண உரிமை இருந்தாலும் அதை விட்டுக் கொடுத்து விடுகிறேன். ஆனால் அதற்கு ஒரு நிபந்தனை இருக்கிறது. வடதிசையின் மீது படை எடுத்துச் செல்ல மூன்று லட்சம் போர் வீரர் கொண்ட சைன்யம் எனக்கு வேண்டும். சைன்யத்துக்கு வேண்டிய தளவாட சாமான்களும் சாமக்கிரியைகளும் ஒரு வருடத்துக்கு உணவுப் பொருள்களும் திரட்டித்தர வேண்டும். மாகடலில் செல்லக் கூடிய முந்நூறு பெரிய மரக்கலங்களும் வேண்டும். பார்த்திபேந்திரனைக் கப்பல் படைத் தலைவனாக்கிக் கடலோரமாக வரச் செய்துவிட்டு நான் தரை மார்க்கமாக வட நாட்டின் மீது படை எடுத்துச் செல்வேன். கங்கை நதியின் முகத்துவாரத்தில் நானும் பார்த்திபேந்திரனும் சந்திப்போம். பிறகு மேலும் வடக்கே போவோம். என் குலத்து முன்னோன், என் பெயர் கொண்ட கரிகால் வளவன், இமயமலை மீது புலிக் கொடியை நாட்டினான் என்று கவிஞர்கள் பாடி வைத்திருக்கிறார்கள். என் முன்னோர் சாதித்ததை நானும் இப்போது மறுபடியும் சாதிப்பேன். என்னுடைய வாள்வலி கொண்டும், எனக்குத் துணை வரும் வீரர்களின் தோள்வலி கொண்டும், கிருஷ்ணை நதிக்கு வடக்கே நானாகக் கைப்பற்றும் நாடுகளுக்குச் சக்கரவர்த்தியாவேன். அன்றி, போரில் மடிந்தால், சோழ குலத்தின் வீரப் புகழை நிலை நாட்டினோம் என்ற மகிழ்ச்சியுடன் வீர சொர்க்கம் அடைவேன். பழுவூர்ப் பாட்டா! கடம்பூர் மாமா! என்ன சொல்கிறீர்கள்?

தொடரும்...

# சிறுவர் அரங்கம்



## முட்டாள் மகன்



ஒரு நகரத்தில் பணக்கார வியாபாரி ஒருவன் இருந்தான். அத்தியாவசியப் பொருட்களை வண்டியில் ஏற்றிக் கொண்டு, ஒரு தீவுக்குச் சென்று விற்று வருவது அந்த வியாபாரியின் தொழில்.

வியாபாரிக்கு ஒரு மகன் இருந்தான். அவன் படிக்கவில்லை. இளைஞனாக இருக்கும் போதே தன் மகனுக்கு தன்னுடைய வியாபாரத்தைக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று நினைத்தான் தந்தை.

பொருட்களைச் சேகரித்துக் கொண்டு தீவுக்குப் புறப்பட்டான் வியாபாரி. அப்போது விலை உயர்ந்த ஒருவித வாசனை மரக்கட்டைகளையும் கொண்டு சென்றால், நல்ல விலைக்கு விற்கலாம் என்று நினைத்து, நிறையக் கட்டைகளை வண்டியில் ஏற்றிக் கொண்டு, கூடவே மகனையும் அழைத்துச் சென்றான் வியாபாரி.

தீவில், வழக்கம் போல் கொண்டுபோன பொருள்கள் யாவும் விற்பனை ஆயின! ஆனால், புதிய வாசனை மரக் கட்டைகளை மட்டும் தீவில் உள்ள மக்கள் விரும்பவில்லை. அதனால் அவற்றைத் திரும்பக் கொண்டு வரத் தீர்மானித்திருந்தான் வியாபாரி.

வேறு பொருள் ஏதாவது வாங்கி, தன்னுடைய ஊருக்குக் கொண்டு போய் விற்கலாமே என்ற எண்ணத்தில் பல பகுதிகளுக்கு அலைந்தான் வியாபாரி.

வியாபாரி வெளியே போயிருந்த சமயம் மகன் மட்டும் இருந்தான். தீவுவாசிகள் கரிமூட்டை வாங்கிச் செல்வதைப் பார்த்தான்.

விற்பனை ஆகாமல் கிடந்த வாசனைக் கட்டைகளைச் சுட்டு கரியாக்கி விற்றுவிட்டான் மகன்.

மேலும் புத்திசாலித்தனமாகத் தான் செய்து விட்டதாக நினைத்து மகிழ்ந்து போனான் வியாபாரியின் மகன்.

வியாபாரி திரும்பி வந்தார். "அப்பா! மிகவும் புத்திசாலித்தனமாக வாசனைக் கட்டைகளை வாங்காத இந்தத் தீவு மக்களிடம் கரியாக்கி விற்று விட்டேன்" என்று பெருமை யாகக் கூறினான். "அட முட்டாளே! நல்ல விலைக்கு விற்க வேண்டிய வாசனைக் கட்டைகளைக் கரியாக்கி நஷ்டம் ஏற்படுத்தி விட்டாயே?" என்று தலையில் அடித்துக் கொண்டு வருந்தினான் வியாபாரி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் இயல்பு வாழ்க்கையை மீட்க ஐ.நா. சனத்தொகை நிதியம் தயார்

'டித்வா' சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களை உள, சமூக ரீதியாக வலுப்படுத்தவும், அவர்களின் இயல்பு வாழ்க்கையை மீட்டெடுக்கவும் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் தலைமையிலான அரசாங்க முயற்சிகளுக்கு ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் ஆதரவளித்துள்ளது.

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சில் அண்மையில் ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் பிரதிநிதிகளுடன் விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. குறித்த கலந்துரையாடலிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டது.

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சினால் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் அரசாங்க நிகழ்ச்சித்திட்டங்களை வலுப்படுத்தி, அவற்றை விரிவுபடுத்துவதன் ஊடாகவே அபிவிருத்திப் பங்காளிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் பங்களிப்பு பயனுள்ளதாக அமையும் என இதன்போது வலியுறுத்தப்பட்டது.

தனித்தனியான திட்டங்களை செயற்படுத்துவதை விட, தற்போதுள்ள அரசாங்க முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதே சிறந்த அணுகுமுறை எனக் குறிப்பிடப்பட்டது.

இதற்கு இணக்கம் தெரிவித்த ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம், 'டித்வா' சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களை உள, சமூக ரீதியாக வலுப்படுத்தவும், அவர்களின் இயல்பு வாழ்க்கையை மீட்டெடுக்கவும் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் தலைமையிலான அரசாங்க முயற்சிகளுக்கு ஆதரவளிக்க முன் வந்துள்ளது.

அதன்படி, பேரழிவிற்குப் பிந்தைய உள, சமூக ஆற்றுப்படுத்தற் சேவைகளில், குறிப்பாக பெண்கள் மற்றும் குடும்பங்களை இலக்காகக் கொண்டு வழங்கப்படும் சேவைகளுக்காக, ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் (UNFPA) தொழில் நுட்பப் பங்காளராகச் செயற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (8)



## "கருத்தாழமும் கண்ணியமும் கொண்ட நாளிதழ்"

எமது அபிமானத்துக்குரிய பத்திரிகை "வலம்புரி". தினசரி வெளிவரும் நாளிதழ்களில் முதன்மை வகிக்கும் "வலம்புரி" தனித்துவமானது. வயது வேறுபாடின்றி எல்லோரும் வாசிக்கக் கூடிய வகையில் தெளிவான அச்சில் வெளியாகும் வலம்புரிக்கு நிகர் வலம்புரியே!

கருத்தாழமும் கண்ணியமும் மிக்க ஆசிரியத் தலையங்கம்: வாசிக்கவும் யோசிக்கவும் செய்கின்றதென்பதை யாரும் மறுக்க முடியாது. எல்லாவற்றுக்கும் மேலாக சங்குநாதம் தருகின்ற முக்கிய தகவல்கள் மாணவ சமூகத்துக்குப் பல வகையிலும் உகந்ததாக இருப்பதால், சிறப்பம்சங்கள் நிறைந்ததாகப் பாராட்டைப் பெறுகின்றது.

ஒவ்வொருநாளும் வலம்புரியைப் பார்க்காவிட்டால் பத்தியப்படாது. இதில் வருகின்ற கதைகளும் கட்டுரைகளும் பிரமாதம்.

"வலம்புரி" ஆசிரிய பீடத்தினரும் நிர்வாகத்தினரும் மற்றும் பணியாளர்களும் நீண்ட ஆயுளுடன் சுகதேகிகளாக இருக்க இறை ஆசி வேண்டிப் பிரார்த்தித்து நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். இப்போது வெளிவருவது போல் தொடர்ந்து பிரசுரமாகி வாசகர்களின் உள்ளத்தில் நீங்கா இடம் பெற்றுச் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

வாழ்க வலம்புரி வளமுடன்!

**"கலாபூஷணம்" இராசையா ஸ்ரீதரன்**
ஓதுவார்,
ஆன்மிக எழுத்தாளரும் வில்லிசைக் கலைஞரும்.


# கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(சாவகச்சேரி)

சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகம் ஊடாக கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரிப் பகுதியில் 50 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டிருந்தன.

கோவிற்குடியிருப்பு கிராம அபிவிருத்திச் சங்கம் ஊடாக முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக மேற்படி உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சாவகச்சேரி றோமன் கத்தோலிக்க பாடசாலை, மீசாலை கமலாசனி வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களுக்கும் சாவகச்சேரியில் உள்ள ஊடக அலுவலகம் ஊடாகவும் மேற்படி உதவித் திட்டத்தை சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகம் வழங்கி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-30)



## சத்திய வேள்வியில் குதித்துள்ள எழுத்தாயுதம்

தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும் தர்மம் மறுபடியும் வெல்லும் என்பதற்கு இணங்க சத்திய வேள்வியில் குதித்துள்ள ஒரு எழுத்தாயுதம் தான் "வலம்புரி". மகாபாரதப் போரில் கிருஷ்ண பரமாத்மா கையில் எடுத்த சங்கு இன்று ஈழத் தமிழ் மண்ணில் அநீதிகளுக்கு எதிரான குரலாக "வலம்புரி" வாயிலாக ஒலிக்கிறது. நடுவுநிலை தவறாது நன்னெறி காக்கின்ற ஒரு செய்திப் பத்திரிகையாக கடந்த 26 ஆண்டுகளாக இலங்கையின் சிரசு என்று வர்ணிக்கப்படுகின்ற யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்து கொண்டிருக்கிறது. ஊடகத்துறையில் தனக்கென தனித்துவமான பண்புகளைத் தாங்கி எல்லா மக்களையும் இணைக்கின்ற பெரும் பணியை "வலம்புரி" ஆற்றுகிறது. வலம்புரியின் ஆசிரியர் தலையங்கம் சமூகப் பிரச்சினைகளை, அரசியல் பிரச்சினைகளை, சமயப் பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து அவற்றுக்கான நல்ல தீர்வுகளையும் சமூகத்துக்குக் கொடுக்கின்ற ஒரு பெரும் பணியை ஆற்றுகிறது.

இலங்கையில் வெளியாகும் தமிழ் அச்சு ஊடகங்களில் "வலம்புரி" வாசகர்களின் அபிமானம் மிக்க பத்திரிகையாக விளங்குகின்றது. அதற்கு காரணம் மக்களின் பிரச்சினைகளை மனதிலே கொண்டு எவருக்கும் அஞ்சாது குரல் கொடுக்கின்றமையே ஆகும். தமிழ் பேசும் மக்களின் நாடித்துடிப்பை அறிந்த ஊடகம் "வலம்புரி" என்றால் அது மிகையாகாது.

ஈழத் தமிழ் இலக்கிய வளர்ச்சியிலே "வலம்புரி" காத்திரமான பணியை ஆற்றி வருகின்றது. அத்தோடு கல்விப் பணி, சமூகப் பணி என்பவற்றையும் தனது ஆயுதமான எழுத்தினால் ஆற்றி வருகின்றது. அதேவேளை தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டத்திற்கும் தன்னாலான பணியை ஆற்றி வருதல் கண்கூடு. அரசியல், பொருளாதாரம், சமூகம், மருத்துவம், விளையாட்டு, பொழுதுபோக்கு என அனைத்து அம்சங்களையும் தாங்கியதாக அதனுடைய வார ஏடான "சங்குநாதம்" மிளிர்வது குறிப்பிடத்தக்கது. இவ்வாறான சிறப்புக்கள் பொருந்திய "வலம்புரி" எதிர்காலத்தில் இன்னும் கவர்ச்சியோடும் துணிச்சலோடும் வெளிவர என் இனிய அகவை நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்து அமைகின்றேன்.

**எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி**
ஆசிரியர் "காந்தீயம்"
அகில இலங்கை காந்தி சேவா சங்கம்

## அத்துமீறிய ...

வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில்,

தமிழ்மக்களுக்குச் சொந்தமான பூர்வீகக் காணிகள் பௌத்த சிங்கள பேரினவாத நிகழ்ச்சி நிரலுடன் கட்டப்பட்ட சட்டவிரோத விகாரைக்கு எதிராக அதே சமயம் வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் ஏகமனதாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் நாங்கள் பங்கெடுத்திருந்த போது எங்களில் ஐவரைப் பொலிஸார் தேடித் தேடிக் கைது செய்தனர்.

அரசாங்கத்தினால் நன்கு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட கைதாக இந்தக் கைது அமைந்துள்ளது.

குறித்த பௌத்த பன்சலையை நிர்வகிப்பவர்கள் பொதுமக்களுடைய காணிகளை அடாத்தாகக் கைப்பற்றி சட்டவிரோத கட்டிடங்கள் அமைத்து அடாத்தாக இராணுவப்பலத்துடன் தாங்கள் அதனை ஆட்சியுரிமை செய்து முகாமை செய்கின்ற நிலைமையிலே நாங்கள் எங்கள் மக்களின் காணிக்காக நீதியுரிமை வேண்டிப் போராடிய நிலையில் கைது செய்யப்படுகின்றோம். நீதிமன்றம் ஏற்கெனவே ஒரு தீர்ப்பை வழங்கியதாகவும் சொல்லி இருந்தார்கள். நீதிமன்றத் தீர்ப்பை மதிக்கிறோம்.

நீதிமன்ற தீர்ப்புக்குப் பாதகமில்லாமல் ஜனநாயக அகிம்சை வழியிலே நாங்கள் போராடி இருந்தோம். இலங்கையில் பௌத்த சிங்களப் பேரினவாதம் தொடர்பில் கடந்தகாலங்களிலே நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்புகளைக் கூட பொலிஸார் நடைமுறைப்படுத்தவில்லை. அது ஒரு அப்பட்டமாகவே தெரிந்த விடயம். குருந்தூர் மலையில் பொலிஸாரை அமுல்படுத்துமாறு நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்புக்களை அவர்கள் நடைமுறைப்படுத்தவில்லை.

இந்நிலையில் அமைதிக்கும் சட்டத்திற்கும் மதிப்பளித்து ஜனநாயக ரீதியில் போராடிய நாங்கள் மிலேச்சத்தனமாகக் கைது செய்யப்பட்டிருக்கிறோம். இந்தக் கைதுகளின் போதான நடவடிக்கைகள் என்பது எங்களின் பாதுகாப்பை, அடிப்படை உரிமைகளை மீறுவதாக உள்ளது என்றுள்ளது.

அதேவேளை குறித்த சம்பவம் குறித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஸ் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில்,

இந்து மதத்தலைவர் தாக்கப்பட்டமை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத இனவாத - மதவாத வெறிச்செயல் தையிட்டியில் அரங்கேறிய சம்பவத்திற்கு வன்மையான கண்டனத்தைப் பதிவு செய்திறோம் என்றுள்ளது. (ந-7,33,104)

## வவுனியாவில் ...

இதில் படுகாயமடைந்த இளைஞர் உடனடியாக மீட்கப்பட்டு செட்டிகுளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

எனினும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் தவசிகுளம் பகுதியைச் சேர்ந்த யோ.அபிசாந் (வயது 19) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

சம்பவத்துடன் தொடர்புடையவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கையில் [illegible] ஸார் முடுக்கிவிட்டுள்ளனர். (ந-7,250)

# தேன் சொட்டும் பத்திரிகை

உளம் பறிக்கும் உணர்வான பத்திரிகை அதன்
ஊக்கமதுவே உலகை வியக்கவைக்கிறது
களம்பலகண்ட போதும் கொழும்பையும் -சுண்டிக்
கவர்ந்திழுக்கும் கனதியான பத்திரிகை - கலை
வளம் தரும் இலங்கையை வரமாக்கியே - நீடு
வாழ வழிகாட்டும் பத்திரிகை வலம்புரியே - அது
இளம் தலைமுறைக்கும் ஏற்றவாறு
அட்டா - நா இனிக்கும் முதுமைக்கும்
தேன்சொட்டுமாறு பொலிவாய் விளங்கும்
வலம்புரியே தலம் புரிவாய் - நாம்
வேண்டும் வரம் தருகின்றாய் வெல்க வாழ்க
புளகாங்கிதம் அடையுமாறு புதிது புதிதாகப்
பூத்து வருகிறாயே! பொலிவாய் நீடு வாழி


**கே.எஸ்.சிவஞானராஜா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## மகனீசிய சத்துள்ள மூலிகை உணவுகளின் ஆரோக்கிய நன்மைகள்





டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

மகனீசிய சத்தானது உடலிற்கு தேவையான அத்தியாவசியமான கனிமமாகும். எமது உடம்பில் 300 இற்கும் மேற்பட்ட உயிர் வேதியல் செயற்பாடுகளிற்கு தேவையான சத்து மகனீசியமாகும்.

சில ஆய்வுகளின் படி 70% வீத மானோருக்கு இச்சத்து குறைவாக காணப்படுவதாக கூறுகிறது.

நாம் இயற்கையாக எந்தெந்த உணவு மூலிகைகளில் மகனீசிய சத்து நிறைந்திருக்கிறது என்று ஆராயின், அடுத்ததாக அதை எப்படி சாப்பிட்டால் அதிக பட்ச பலன் கிடைக்கும், எப்போது சாப்பிட வேண்டும், யார் எல்லாம் சாப்பிடக்கூடாது என்று பார்த்தால், அதற்கு முதலில் மகனீசியம் சத்து குறைவாக எமது உடம்பில் இருந்தால் என்னென்ன அறிகுறிகள் இருக்கும் என்று பார்த்தால், கை , கால்களில் எறும்பு ஊருவது போன்ற உணர்வு, சோர்வாக இருத்தல், தசைகள் வலு விழந்து போதல், தசைப் பிடிப்புகள் (Muscle cramps) , பசி எடுக்காமல் இருத்தல், கொஞ்ச தூரம் நடந்தாலும் சோர்வாக இருத்தல், போன்றன ஏற்படலாம்.

இவை எல்லாம் தனிய மகனீசியம் குறைபாட்டால் மட்டும் ஏற்படாது. ஆனால் தீவிர மகனீசியம் குறைபாட்டில் இக்குறி, குணங்கள் உண்டாகலாம். இதைவிட தீவிர மகனீசியம் குறைபாட்டில் படபடப்பு , இருதய துடிப்பு மாறுபாடு, மனம் ஒரு நிலையில் இருக்காது (Mood Swing) அதாவது அதிக கோபம், பதற்றம், சாதாரண மன நிலை மாறி, மாறித் தோன்றும். எமது மகனீசியம் அளவு எவ்வளவு இருக்க வேண்டுமென அறிந்து, உணவு மூலம் மகனீசியச் சத்துக்களை எடுத்து தீவிர குறைபாடு ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

பொதுவாக ஆண்களுக்கு 400 மி.கிராம் - 420 மில்லிகிராமும், ஒரு நாளைக்கு தேவை. பெண்களுக்கு 310 மி.கி-320 மி.கிராமும், கர்ப்பிணிப் பெண்களுக்கு 350மி.கி- 360 மி.கிராமும், பாலூட்டும் தாய்மாருக்கு 310 மி.கி - 320 மி.கிராமும் தேவையாகும். மேலும் மகனீசியம் சத்துள்ள உணவுகளை உண்ணும் போது கோப்பி, தேநீர் அருந்துவதை தடுக்க வேண்டும்.

ஏனெனில் இதிலிருக்கும் தனின், கபின்(tannins,caffeines) சத்துக்கள் மகனீசியத்தை அகத் துறிஞ்சப்படுவதை தடுக்கும். எனவே மகனீசியம் சத்துள்ள உணவுகளை உண்ணும்போது இரண்டு மணிநேர இடைவெளிவிட வேண்டும். கோப்பி, தேநீர் அருந்துவதாக இருந்தால் முதலாவது உணவாக முளைக்கீரை, 100 கிராம் முளைக்கீரையில் 87 மி.கிராம் மகனீசிய சத்துண்டு. இது அதிக குளோரோபில் நிறைந்ததுமாகும். அடுத்தது பொன்னாங்கண்ணிக்கீரை இதில் 100 கிராம் கீரையில் 75 மி.கிராம் மகனீசியச்சத்துண்டு.

அடுத்தது கர்சலாங்கண்ணிக் கீரை. இது கண்ணிற்கும் சிறந்தது. அடுத்து பசளைக்கீரை 100 கிராம் கீரையில் 79 மி.கிராம் மகனீசியச் சத்துண்டு.

அத்துடன் இரும்புச் சத்து, போலோற்று சத்துக்களும் நிறைந்தது இந்தப் பசளைக்கீரை இரத்தச் சோகை இருப்பவர்களும் இப் பசளைக்கீரையை சாப்பிடலாம்.

இவ் எல்லாவகைக் கீரைகளையும் விட அதிகளவு மகனீசியச் சத்து நிறைந்தது அறக்கீரை, இவ் அறக்கீரை 100 கிராமில் 368 மில்லி கிராம் மகனீசியச் சத்துண்டு. சித்த மருத்துவத்தில் பத்தியத்தில் சிறந்தது அறக்கீரையாகும்.

எனவே இக் கீரைகளை அத்தியாவசியமாக உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

அடுத்து பருப்பு வகைகள். தானியங்களிலும் மகனீசியம் சத்துக்கள் உண்டு.

அதாவது மகனீசியம் சத்துக்கள் என்புகளுக்கு முக்கியம். நீங்கள் தனிய கல்சியம் சத்துத்தான் என்புகளுக்கு அவசியம் என்று நினைக்கலாம்.

ஆனால் மகனீசியம், கல்சியம் இரண்டு சத்துக்களும் அளவாக இருந்தால் தான் என்புகள் வலுவாக இருக்கும். இருதய ஆரோக்கியத்திற்கும் மகனீசியம் சத்து அவசியம் (Cardiac ion Channels) நீரழிவு நோயாளிகளுக்கு மகனீசியம் சத்து அவசியம்.

அதாவது சீனிச்சத்து எரிக்கப்படுவதற்கும் மகனீசியம் அவசியம்.

நரம்பு மண்டலங்களை, மூளையின் செயற்பாடுகளை சீராக இயக்குவதற்கும், தசைகளை வலுப்படுத்தவும், உடலிற்கு சக்தி கொடுக்கக்கூடிய ATP உற்பத்திக்கும் மகனீசியம் சத்து அவசியமாகும். புரத உற்பத்திக்கும் அவசியமாகும். தானியங்களை பொறுத்தவரை கேழ்வரகு, இதில் 137 மி.கிராமும், காராமணியில் 154 மி.கிராமும், கடலைப் பருப்பில் 79 மி.கிராமும், பச்சைப் பயறு , முளை கட்டிய பச்சைப் பயறில் சற்று அதிகமான மகனீசியச் சத்துக்கள் கிடைக்கின்றது.

பூசணி விதைகளில் 592 மில்லி. கிராம் மகனீசியம் சத்து உண்டு. ஆனாலும் அதிகமாக எடுக்கக்கூடாது. பூசணிவிதைகள் மட்டும் 10 கிராமிற்கு மேல் ஒரு நாளைக்கு சாப்பிடக் கூடாது. எள்ளில் 351 மி.கிராம் மகனீசியச்சத் துண்டு.

உயிர்ச்சத்து E நிறைந்த சூரியகாந்தி விதைகளிலும் 325 மில்லி கிராம் மகனீசியச் சத்துக்கள் உண்டு. வேர்க் கடலையிலும் 168 மில்லிகிராம் மகனீசியச் சத்தக்கள் உண்டு.

என்ன விதைகள் ஆயினும் 5 கிராம் - 10 கிராம் வரை தான் நீங்கள் சாப்பிடலாம்.

அதிகமாக எடுக்கக்கூடாது.

ஒரு உணவை மட்டும் நம்பி இருக்கக்கூடாது. வாழைத்தண்டு, பீற்றூற், வெண்டிக்காய் போன்ற வற்றிலும், வாழைப்பழம், பப்பாளிப் பழம், கருஞ்சீரகம் போன்றவற்றிலும் கொத்தமல்லிக் கீரையிலும் மகனீசியச் சத்துக்கள் உண்டு.

நீங்கள் இவ் மகனீசியம் சத்துள்ள உணவுகளை கலந்து கூட்டு தயாரித்து மஞ்சள், உப்பு சேர்த்து பயன்படுத்தி பலனை பெற்றுக் கொள்ளலாம். எனவே கனிமச்சத்துக்களுக்கு கூட மாத்திரைகளில் தங்கி இருக்காமல் இப்படியான உணவுக் கலவைகள் மூலம் மகனீசியச் சத்து குறைபாடுகள் ஏற்படாமல் தவிர்த்துக் கொள்ளலாம்.

# இராசிபலன்

22.12.2025
மார்கழி 07 , திங்கட்கிழமை
துதியை முற்பகல் 10.40 மணி வரை

உத்தராடம் பின்னிரவு 5.24 மணிவரை
சுபநேரம் 12.25-1.55 மணிவரை
இராகுகாலம் 7.55-9.25 மணிவரை

சந்திராஷ்டமம்-
திருவாதிரை

வளவன்




உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.




அலைச்சல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், இனத்தார் பகை மறையும், எடுத்த முயற்சிகள் கைகூடும், பயணங்கள் செல்லப் போட்ட திட்டங்கள் கைகூடும்.




ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம்.




வராத உறவினர்கள் உங்கள் வீடுகளுக்கு திடீரென வரக்கூடும், பொருளாதார நிலை உயர வழி வகை செய்வீர்கள், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.




போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள்,இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், நோயில் இருந்து நிவாரணம் பெறுவீர்கள், வருமானம் திருப்தி தரும்




வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், பிள்ளைகளின் வழியில் பெருமை தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.




வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள்.




உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்,பாராட்டும் புகழும் கூடும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.




ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பாக்கிகள் வசூலாகி பண வரவு கிடைக்கும், வாக்கு மேன்மையுண்டு.




நீண்ட நேரம் பணி புரியும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், வருமானத்தை அதிகரிக்கும் வழியில் நாட்டம் கூடும்.




சிறிய வேலை ஒன்றிற்காக பலமுறை அலைய நேரிடலாம், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், தேவையற்ற குழப்பங்களைத் தவிர்ப்பது நல்லது.




பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகம் அடைவீர்கள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

கடந்து போன நேரம் ஒருபோதும் திரும்புவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவான, அமைதியான மனமே எதிர்பாராத சூழ்நிலைகளிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும். ~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எங்கள் பிரச்சினையை டெல்லிக்கு கூறவேண்டும்

அரசியல் இராஜதந்திரம் என்பது நம் தமிழ் அரசியல் தரப்புகளிடம் பூச்சியமாகவே உள்ளது.

இதை நாம் கூறும்போது பூச்சியம் என்று கூறுவதைவிட, எதிர்க்கணியத்தில் உள்ள தென்று கூறுவதுதான் சரி என்று நீங்கள் முணுமுணுப்பதும் எமக்குத் தெரிகிறது.

ஆம், ஒரு காலத்தில் ஈழத் தமிழர்களின் விவகாரம் தமிழகத்தினூடாக இந்திய மத்திய அரசை சென்றடைய வேண்டிய நிலைமை இருந்தது. தவிர, தமிழகத்தின் முதன்மைக் கட்சிகளான திமுக மற்றும் அதிமுக என்பன இந்திய மத்திய அரசில் செல்வாக்குப் பெற்றிருந்தன.

உண்மை. அன்னை இந்திரா காந்தியின் ஆட்சிக்கு தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆரின் ஆதரவு இருந்தது.

அதேபோல மன்மோகன்சிங் பிரதமராக இருந்த காலத்தில் கலைஞர் கருணாநிதியின் திமுக மத்தியில் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தது.

எனினும் 2009ஆம் ஆண்டு வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழின அழிப்பு நடந்தபோது அதனைத் தடுத்து நிறுத்தக்கூடிய வலிமை அன்றைய தமிழகத்தின் முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதியிடம் இருந்ததாயினும் அதை அவர் செய்யவில்லை.

இதை இன்னும் சுருக்கமாகக் கூறுவதாயின், ராஜிவ் காந்தியின் மரணம் தமிழகத்தில் நடந்ததன் பின்னர், தமிழகத்தின் முதன்மை அரசியல் கட்சிகள் எங்கள் விடயத்தில் கருசனையற்றுள்ளன.

அதேநேரம் கலைஞர் கருணாநிதி, செல்வி ஜெயலலிதா ஆய தமிழகத்தின் முக்கிய ஆளுமைகளின் மறைவுக்குப் பின்னர் தமிழகத்தின் சமகால அரசியல் எங்கள் ஈழத் தமிழர் விடயத்தை ஒரு பொருட்டாகக் கருதவில்லை.

அதேநேரம் தற்போது எங்கள் விடயத்தில் ஆளும் பாரதிய ஜனதா கட்சி ஈடுபாடு கொண்டுள்ளது.

ஆம், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் எங்களின் பிரச்சினையை தமிழகத்தினூடாக அணுக விரும்பவில்லை. மாறாக, அவர் நேரடியாகக் கையாள்வதிலேயே கவனம் செலுத்துகிறார்.

அதனாலேயே இலங்கைக்கு வருகை தந்த பிரதமர் மோடி; இரா.சம்பந்தர் உள்ளிட்ட தமிழ் அரசியல்வாதிகளைச் சந்தித்தபோது, இந்தியாவுக்கு வாருங்கள். அங்கு பேசுவோம் எனக் கூறியிருந்தார்.

உலகம் முழுவதும் மதிக்கின்ற இந்திய பிரதமர் நரேந்திர மோடி விடுத்த அழைப்பை எங்கள் தமிழ்த் தரப்புகள் தவறவிட்டனவெனில், இவர்களிடம் இராஜதந்திரம் இருக்கிறதா? என்ன?

ஆக, இப்போதிருக்கின்ற இந்திய அரசியல் சூழ்நிலையில் நாம் எமது பிரச்சினையை பிரதமர் மோடியிடம் நேரடியாக எடுத்துக்கூறுவது தான் பொருத்தமானது.

இதைவிடுத்து, தமிழக அரசியல் தலைவர்களைச் சந்தித்து அவர்கள் ஊடாக இனப் பிரச்சினைக்கான தீர்வை வலியுறுத்துவதென்பது சாத்தியமற்றதென்ற உண்மையை நாம் உணர்ந்தாக வேண்டும்.

அதிலும் அடுத்த ஆண்டின் முற்பகுதியில் தமிழக சட்டசபைத் தேர்தல் நடைபெற இருக்கின்ற இந்த நேரத்தில், நாம் தமிழகத் தலைவர்களைச் சந்திப்பது அவர்களின் தேர்தல் பிரசாரத்துக்கு உதவுமேயன்றி எங்களின் பசிக்கு அது தீனியாகாது.

# நாட்டில் முன்மாதிரியான புதிய அரசியல் கலாசாரம் துளிர்விட்டுள்ளது

## ●●●●அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு●●●●

*(கிளிநொச்சி)*

நாட்டில் புதிய அரசியல் கலாசாரம் ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. இதற்கு எமது அரசாங்கம் முன்மாதிரியாக செயற்படுகின்றது. அத்துடன் போதைப்பொருள் அச்சுறுத்தலில் இருந்து எமது இளைஞர்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

ஜனாதிபதி நிதியத்தினால் உயர்தரத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற வடமாகாண மாணவர்களைப் பாராட்டும் நிகழ்வு கிளிநொச்சியிலுள்ள நெலும்பியச மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்படி தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

வங்குரோத்து நிலையில் இருந்த நாடே எம்மிடம் ஒப்படைக்கப்பட்டது. இதனால் பொருளாதார ரீதியாக பாதிப்புகள் இருந்தன. எனவே பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கு கடந்த ஒரு வருடமாக பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

நாட்டில் அரசியல் கலாசாரம் மாற்றப்பட்டு வருகின்றது. சிறந்ததொரு அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதே இதன் நோக்கமாகும். புதிய அரசியல் கலாசாரம் என்றால் என்னவென்பதை நாம் செயலில் காட்டியுள்ளோம்.

பிரதமருக்கு மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு 33 இலட்சம் ரூபா, ஆனால் எமது பிரதமர் 4 இலட்சம் ரூபாதான் பயன்படுத்துகின்றார். மிகுதிப் பணத்தை திறைசேரிக்கு அனுப்பி விடுகின்றார்.

முன்பு பாராளுமன்ற உறுப்பினர் அமைச்சராக இருந்தால் பாராளுமன்ற உறுப்பினருக்குரிய சம்பளம் மற்றும் அமைச்சருக்குரிய சம்பளம் கிடைக்கப்பெற்றது. சலுகைகளும் அப்படித்தான். ஆனால் எமது ஆட்சியில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தை மட்டும் தாருங்கள். வேறு எதுவும் வேண்டாம் என அமைச்சர்கள் கடிதம் அனுப்பினார்கள். நாம் இரண்டு சம்பளம் பெறவில்லை.

அமைச்சர்களுக்கு கொழும்பில் வீடுகள் இருந்தன. அவற்றை நாம் பெறவில்லை. எமது சபாநாயகர்கூட சபாநாயகருக்குரிய அதிகாரபூர்வ இல்லத்துக்குச் செல்லவில்லை.

கடந்த காலங்களில் இலஞ்சம் மற்றும் ஊழல், மோசடிகள் தலைவிரித்தாடின. இவற்றை ஒழிப்பதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

போதைப்பொருள் அச்சுறுத்தலில் இருந்து எமது இளைஞர் சமுதாயத்தை நாம் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுப்போம். போதைப் பொருள் வியாபாரிகளால் முன்னெடுக்கப்பட்டு வரும் கறுப்பு அரசாங்கத்தைத் தோற்கடிக்க வேண்டும். மக்களால் தெரிவுசெய்யப்பட்ட எமது அரசாங்கத்துக்கு இருக்கும் மிக முக்கிய பொறுப்புகளில் இதுவும் ஒன்றாகும். நிச்சயம் போதைப்பொருளை ஒழிப்போம்.

அதேவேளை, எமது அரசாங்கத்தின் எண்ணக்கருவின் அடிப்படையில் பிள்ளைகளின் வாழ்க்கையை வலுப்படுத்தும் இத்தகைய முயற்சிகளில் பங்களிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த வாய்ப்பை வழங்கிய ஜனாதிபதி நிதியத்திற்கு நன்றி தெரிவிக்கின்றேன். வறுமையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கவும், கல்வி பெறும் குழந்தைகளின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்பவும் நிறுவப்பட்ட ஜனாதிபதி நிதியம், தற்போதைய அரசாங்கத்தின் கீழ் பிராந்திய மட்டத்தில் செயற்படுத்தப்பட்டு தகுதியான பயனாளிகளுக்கு நேரடியாக நன்மைகளை வழங்கி வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். *(ந-7)*

## ஐந்து மீனவர்களுடன் புறப்பட்ட படகு மாயம்

மாத்தறை, மிரிஸ்ஸ மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து புறப்பட்ட பல நாள் மீன்பிடிப் படகொன்று காணாமல் போயுள்ளதாக முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

இதுரங்கி 1 என்ற பல நாள் மீன்பிடிப் படகே காணாமல் போனதாகவும் மேலும் அதில் 5 மீனவர்கள் இருந்ததாகவும் குறித்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இறுதியாக டிசம்பர் 6 ஆம் திகதி படகில் பயணித்தவர்களிடமிருந்து அழைப்பு வந்ததாகவும் அதன் பின் அவர்கள் தொடர்பாக எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என்றும் காணாமல் போன மீனவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர். *(ந-7)*

## 53 கிலோ கஞ்சா தருமபுரத்தில் மீட்பு

*(தருமபுரம்)*

இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டு சட்டவிரோதமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 53 கிலோவுக்கும் அதிக எடையுள்ள கேரள கஞ்சா தருமபுரம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைவாக நேற்று (21) இராணுவத்தினர் தர்மபுரம் பொலிஸார் மற்றும் சிறப்பு அதிரடிப் படையினர் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

சுண்டிக்குளம் களப்பு பகுதியில் உள்ள காட்டுப்பகுதியில் அவை மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட கஞ்சாவின் நிகர நிறை 53 கிலோ 500 கிராம் எனக் கணக்கிடப்பட்டுள்ள நிலையில் மீட்கப்பட்ட கஞ்சா தொடர்பாக தருமபுர பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். *(ந-7)*

## வேகக் கட்டுப்பாட்டை இழந்த கார் விபத்து

திருகோணமலை - சேருநுவர பொலிஸ் பிரிவிலுள்ள சேருநுவர பகுதியில் நேற்று காரொன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

மட்டக்களப்புக்கு திருமண வீட்டுக்குச் சென்று மீள திருகோணமலை நோக்கி பயணிக்கையில் சாரதியின் தூக்கக் கலக்கத்தினால் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

விபத்தில் காரில் பயணித்தவர்களுக்கு எவ்வித காயங்களோ உயிர்ச்சேதமோ ஏற்படவில்லை எனத் தெரிவித்த சேருநுவர பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். *(ந-7)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாராளுமன்றத்தில் பெண்களின் அரசியல் 20

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

1977 இல் ஜெனிவாவில் நடந்த உலக சுகாதார அமைப்பின் மாநாட்டின் துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இவ்வாறு இருந்த போதும் 1977 தேர்தலில் தோல்வி அடைந்தார். அதனால் அரசியலை கைவிட்டார்.

பின்னர் சமூக சேவையில் ஈடுபட்டிருந்த சிவகாமி அம்மையாரை 1978இல் அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமான் தனது அமைச்சின் கீழ் செயற்பட்ட கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தலைவராக நியமித்தார். ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அவருக்கு தேசமான்யா பட்டத்தை வழங்கினார் மற்றும் யுனெஸ்கோவுடன் இணைந்த உலக கைவினைப் பேரவையின் முதல் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 2006 இல், கிராமிய கைத்தொழில்கள் மற்றும் சுய தொழில் ஊக்குவிப்பு அமைச்சின் தேசிய ஆலோசகராக நியமிக்கப்பட்டார். பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஜனாதிபதி ஆலோசகராக நியமிக்கப்பட்டார்.

**குசலா அபயவர்தன (1970-1977)**

குசல விசித்ரா அபயவர்தன ஒரு இலங்கை சமூக சேவகர் ஆவார். அவர் 1970 முதல் 1977 வரை பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார். பொரல்ல தொகுதியில் 592 அதிகப்படியான வாக்குகளைப் பெற்று வென்ற குசலா அபயவர்தன முதற் தடவையாக பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார். லங்கா சமசமாஜ கட்சியின் சார்பில் போட்டியிட்ட இவர். ஐக்கிய தேசிய கட்சியின் அரசாங்கத்தில் தொழில் வாய்ப்பு, வீடமைப்பு அமைச்சராகப் பதவி வகித்த எம். எச். மொகமட்டை தோல்வியுறச் செய்திருந்தார். இவர் பெற்ற வாக்குகள் 16421.

ஆரம்பத்தில் இவர் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து திம்பிரிகஸ்யாய வட்டாரத்தில் கொழும்பு மாநகர சபைக்கு போட்டியிட்டார், ஆனால் பெர்னாட் சொய்சாவால் தோற்கடிக்கப்பட்டார். பின்னர் கொழும்பு மாநகர சபைக்கு தெரிவு செய்யப்பட்டு மாநகர சபை உறுப்பினராகவும் பணியாற்றினார். குசலா பெர்னாண்டோ 1959 இல் ஊடகவியலாளரும் ட்ரொட்ஸ்கிசவாதியுமான ஹெக்டர் அபயவர்தனவை மணந்தார். 1970 பொதுத் தேர்தலில் அவர் லங்கா சமசமாஜக் கட்சி வேட்பாளராக பொரளை தொகுதியில் போட்டியிட்டார்.

இவர் 1920 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் திகதி கொழும்பு திம்பிரிகஸ்யாயவில் ஒரு செல்வந்த குடும்பத்தில் பிறந்தார். அவரது தந்தை வருசஹென்னடிகே டேனியல் பெர்னாண்டோ, OBE, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கைரேகை பிரிவில் ஹல்ஸ்டோர்ப்பில் பணிபுரிந்தார். பின்னர் சர் ஒலிவர் குணதிலக்கவுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்ட ஒரு வெற்றிகரமான வர்த்தகர் ஆனார். அவர் யுனைடெட் இம்போர்ட்ஸ், யுனைடெட் மோட்டார்ஸ், யுனைடெட் டிராக்டர் எக்யூப்மென்ட் ஆகியவற்றின் நிறுவனர் மற்றும் இயக்குநராக இருந்தார்.

**சீதா செனவிரத்ன செனற்சபை உறுப்பினர் 1967**

அடெலின் மொலமூரேவின் ஒரே மகள் சீதா மொலமூரே செனவிரத்னவும் (1914-1998) பிற்காலத்தில் அரசியலில் இறங்கினார். தனது பாட்டனார், தந்தை, தாய் அனைவருமே அரசாங்க சபையில் அங்கத்துவம் வகித்து ஆட்சியில் பங்கு கொண்டவர்கள். எனவே 1965 தேர்தலில் சீதா போட்டியிட்ட போதும் தோல்வியைத் தழுவினார். அங்கு அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் டபிள்யூ. ஏ. கருணாசேனவிடம் 3,340 வாக்குகளால் தோல்வியடைந்தார். 1967 ஆம் ஆண்டு பெல் மடுவ தொகுதியின் இடைத் தேர்தலிலும் போட்டியிட்டு தோல்வியுற்றார். இம்முறை 12,627 வாக்குகளைப் பெற்ற தர்மதாச வன்னியாராச்சியிடம் 9,842 வாக்குகளைப் பெற்று தோல்வியடைந்தார். ஆனால் அதே 1967 ஆம் ஆண்டு அவரை செனற் சபைக்கு நியமன உறுப்பினராக நியமித்தது அப்போதைய டட்லி சேனநாயக்க தலைமையிலான ஐ.தே.க அரசாங்கம். சிறுவர்கள், இளைஞர்கள் துறைக்கான தேசிய சபையின் தலைவராக அவரை நியமித்தது அரசாங்கம். ஆனால் 1970 இல் செனற் சபை அங்கத்துவத்திலிருந்து இராஜினாமா செய்துவிட்டு அதே ஆண்டு நடத்தப்பட்ட பொதுத்தேர்தலில் பலாங்கொடை தொகுதியில் ஐ.தே.கட்சியின் சார்பில் போட்டியிட்டு 11,616 வாக்குகளைப் பெற்று மீண்டும் தோல்வியடைந்தார்.

அவரோடு போட்டியிட்டு வெற்றி பெற்றவரும் ஒரு பெண். மல்லிகா ரத்வத்த அத் தேர்தலில் வெற்றியடைந்தார். இலங்கையின் அரச அதிகாரத்தில் தாயும் மகளும் பங்காற்றிய முதலாவதாக பதிவுபெறுபவர்கள் அடெலினும் சீதாவும் தான். 1989ஆம் ஆண்டு இலங்கை அரசின் உயரிய விருதுகளில் ஒன்றான தேசபந்து விருது சீதாவுக்கு வழங்கப்பட்டது. அவர் 1998 ஆம் ஆண்டு இறந்தார்.

**தோல்வி அடைந்த பெண்கள்**

குசுமாசிறி குணவர்தன (கொலன்னாவ), ஜி.கே. நீனா விஜேசூரிய (மொறட்டுவ), லிலியன் பீரிஸ் (பசறை), ஐ.விமலா கன்னங்கர (கலிகமுவ), டி.எச். பெர்னாண்டோ (தெஹியோவிட்ட), டி.எம். எஸ். தர்மதிலக (நிவித்திகல), பி.சோமா மேத்யூ (கலவான), எம். சீதா செனவிரத்ன (பலாங்கொடை).

**இலங்கை பாராளுமன்றத் தேர்தல், 1977**

இலங்கையின் 8ஆவது பாராளுமன்றத் தேர்தல் 1977 ஜூலை 21 இல் நடைபெற்றது. பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான இடதுசாரிக் கூட்டணி அரசு தனது ஆட்சிக் காலத்தில் முன்னெப்போதும் இல்லா தவாறு மக்களிடையே செல் வாக்கை இழந்திருந்தது. அவரது பொருளாதாரக் கொள்கை நாட்டில் தொழில் வளர்ச்சி கண்டிருந்தாலும், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியவில்லை. அரசியலமைப்பின் படி 1975 ஆம் ஆண்டில் நடத்தப்பட வேண்டிய தேர்தல் 1972 ஆம் ஆண்டில் அறிமுகப் படுத்தப்பட்ட புதிய அரசியலமைப்பின் படி பாராளுமன்றத்தின் பதவிக் காலம் மேலும் இரண்டாண்டுகள் நீடிக்கப்பட்டது. அரசாங்கத்தின் சிங்களத் தேசியவாதம் மிகப் பலமாகத் தலை தூக்கியதில் தமிழ்ப் பகுதிகளில், குறிப்பாக நாட்டின் வட மாகாணத்தில் அரசியல் குழப்ப நிலை தோன்றியது. நாடு முழுவதும் அவசரகால நிலையை அரசு கொண்டு வந்தது. ஐக்கிய முன்னணியின் கூட்டணிக் கட்சிகளிடையே பிளவுகள் தோன்றின.

அதே வேளை, 1970 தேர்தலில் படு தோல்வியடைந்த ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் செல்வாக்குப் பெற ஆரம்பித்தது. இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வு மூலமாகத் தீர்வு காணப்படும் என அது உறுதி அளித்தது. திறந்த பொருளாதாரத்தை முன்னெடுக்கப்போவதாக அறிவித்தது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் பங்கீட்டு அடிப்படையில் இலவசமாக வழங்கப்பட்ட இரண்டு கிலோகிராம் அரிசியை விட மேலதிகமாக எட்டு இறாத்தல் மாவும் இலவசமாக வழங்க அது உறுதி அளித்தது. பழைய தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து தமிழரசுக் கட்சியின் தலைவர் அ. அமிர்தலிங்கம் தலைமையில் தமிழர் விடுதலைக் கூட்டணியை அமைத்து தமிழர் பிரதேசங்களுக்கு தனிநாட்டுக் கோரிக்கை முன்வைத்தனர்.

இலங்கையின் வரலாற்றிலேயே முதற் தடவையாக ஐக்கிய தேசியக் கட்சி மூன்றில் இரண்டுக்கும் அதிகமான இடங்களைக் கைப்பற்றி ஆட்சியைப் பிடித்தது. அதே வேளையில், இலங்கை பாராளுமன்ற வரலாற்றில், முதற் தடவையாக தமிழர் கட்சி ஒன்று இரண்டாவது அதிகப்படியான இடங்களைக் கைப்பற்றி பாராளுமன்றத்தில் அதிகாரபூர்வ எதிர்க்கட்சியாக வந்தது.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காற்றின்...

தற்போது காற்றின் மாசடைவு மட்டம் 150 முதல் 200 வரை உயர்ந்துள்ளதாகவும் இது ஆரோக்கியமற்ற நிலையைக் குறிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எல்லை தாண்டிய வளிமாசு நகர்வு மற்றும் தற்போது தீவிரமடைந்துள்ள வடகிழக்கு பருவக்காற்று ஆகியவற்றின் தாக்கமே இதற்கு முக்கிய காரணமாகும்.

கடந்த ஆண்டுகளிலும் இதே காலப்பகுதியில் இவ்வாறான நிலைமை அவதானிக்கப்பட்டது.

நாடு முழுவதும் நிலவும் காற்றின் தரத்தை மத்திய சுற்றாடல் அதிகார சபை தொடர்ந்து கண்காணித்து வருகின்றது.

காற்று மாசுபாட்டினால் பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ளவர்கள் (சுவாசக் கோளாறு உள்ளவர்கள், முதியவர்கள் மற்றும் சிறுவர்கள்) இதனால் உடல்நலப் பாதிப்புகளை எதிர்கொள்ள நேரிடலாம்.

எனவே பாதிப்புகள் ஏற்படும் பட்சத்தில் உடனடியாக மருத்துவ ஆலோசனையைப் பெறுமாறும் அவர் பொது மக்களுக்கு அறிவுறுத்தினார். (ந-7)

## தையிட்டி திஸ்ஸ...

டுள்ள தனியார் காணிகளை விடுவிக்குமாறும், விகாரையின் விகாராதிபதிக்கு வழங்கப்படும் பதவி உயர்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் விகாரைக்கு முன்பாக நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்த வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராசா நிரோஷ், சிவகுரு ஆதீன முதல்வர் வேலன் சுவாமிகள் மற்றும் வலி.வடக்கு பிரதேச சபையின் உறுப்பினர்கள் உள்ளிட்ட 5 பேர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் இந்த விடயம் குறித்து புத்தசாசனம், மதம் மற்றும் கலாசார விவகார அமைச்சர் சுனில் செனவி ஊடகங்களிடம் வழங்கிய விசேட செவ்வியில்,

தையிட்டி திஸ்ஸ விகாரை பிரச்சினைக்கு விரைவில் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்தார்.

எனினும் விகாராதிபதிக்கு பௌத்த கலாசாரத்தின் அடிப்படையில் வழங்கப்படும் சான்றிதழ் வழங்கப்படுவதாகவும், அது பாடசாலை உள்ளிட்ட இடங்களில் வழங்கப்படுவது போன்றது எனவும் பதவி உயர்வு அல்ல என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் தையிட்டி விகாரை பிரச்சினையையும் விஹாராதிபதிக்கு வழங்கப்படும் சான்றிதழ் நிகழ்வையும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்த வேண்டாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை தையிட்டி விஹாரை அமைக்கப்பட்டுள்ள காணிகள் குறித்து தமது அமைச்சு உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அளவீடுகளை முன்னெடுத்து வருவதாகவும் அமைச்சர் சுனில் செனவி தெரிவித்தார்.

அதற்கமைய, விகாரைக்குச் சொந்தமான காணிகளை விகாரைக்கு வழங்குவதற்கும் ஏனைய காணிகளை உரிய மக்களிடம் கையளிப்பதற்கும் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-7)

## மனைவியைக்...

துடன், அவர் பொலிஸ் பாதுகாப்புடன் யாழ்.வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா, ஈச்சங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கருவேப்பங்குளம் பகுதியில் 37 வயதுடைய குடும்பப் பெண் ஒருவர் கழுத்துப் பகுதியில் கூரிய ஆயுதத்தால் வெட்டப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

அது தொடர்பில் கணவனை பொலிஸார் கைது செய்ய முற்பட்டபோது கழுத்துப் பகுதியில் கத்தியால் அவர் குத்தி மயக்கமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் ஈச்சங்குளம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் பிரகாரம் குறித்த சம்பவம் தொடர்பில் கணவன் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர் பொலிஸ் பாதுகாப்புடன் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளார். (ந-7,250)

## மாகாண சபைத்...

பல்வேறு தளங்களிலும் இந்தியா பகிரங்கமாக வலியுறுத்திவரும் நிலையில், அவ்வழுத்தத்தைத் தொடர்ந்து பிரயோகிக்குமாறு கோரவிருப்பதாக தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அதேபோன்று தாம் ஆட்சிபீடமேறி ஒரு வருட காலத்துக்குள் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்த பின்னணியில், இன்னமும் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படாமை குறித்தும், அதனை நடத்துவதற்கான அழுத்தங்களை வழங்கவேண்டியதன் அவசியம் குறித்தும் பிரதமர் மோடிக்கான கடிதத்தில் வலியுறுத்தப்படும் எனவும் அதிகாரப் பகிர்வானது அர்த்தமுள்ளதாக அமைய வேண்டியதன் அவசியம் குறித்தும் அக்கடிதத்தில் உள்வாங்கப்படும் எனவும் சுமந்திரன் மேலும் குறிப்பிட்டார். (ந-7)

## முதல்...

இரணைமடு நெலும்பிய மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகப் பிரதமர் ஹரிணி அமரசூரிய கலந்து சிறப்பித்தார்.

உயிரியல், கணிதம், வர்த்தகம், கலை, உயிர் முறை தொழில் நுட்பம், பொறியியல் தொழில்நுட்பம் என ஆறு துறைகளிலும் மாவட்ட ரீதியாக மகுடம் சூடிய முதல் பத்து மாணவர்களுக்கும் இதன் போது தலா ஒரு இலட்சம் ரூபாய் பணமும் சான்றிதழும் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த 300 மாணவர்கள் இப்பரிசுகளைப் பெற்றனர்.

இந்நிகழ்வில் சபாநாயகர் டாக்டர் ஜகத் விக்ரமரத்ன, மீன்வளம், நீர்வாழ் உயிரினங்கள் மற்றும் கடல் வள அமைச்சர் சந்திரசேகர், கூட்டுறவு பிரதியமைச்சர் உபாலி சமரசிங்க, பாராளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், சிறீபவானந்தராஜா, ஜனாதிபதி நிதியத்தின் செயலாளர் ரொஷன் கமகே, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் நிறைஞ்சன், மாவட்டச் செயலாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (ந-7,316)


மஹஜன சம்பத
திகதி 2025.12.21
சீட்டிழுப்பு இலக்கம் 6050
N 3 2 0 3 6 4

அத சம்பத
N 0 3 6 4
சீட்டிழுப்பு இலக்கம் 0625

சுப தவசக்
திகதி 2025.12.21
சீட்டிழுப்பு இலக்கம் 198
விருச்சிகம் 25 31 34
5162

தன நிதானய
திகதி - 2025.12.21
சீட்டிழுப்பு இலக்கம் - 2080
Y 18 19 60 81 Y

மெகா பவர்
திகதி 21/12/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2398
P 04 08 29 32 61

ஜய
திகதி 2025.12.21
சீட்டிழுப்பு இலக்கம் 0318
T 0 4 9 9

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4292
சீட்டிழுப்பு திகதி 21.12.2025
D 19 21 47 59
D

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.12.21
சீட்டிழுப்பு இலக்கம் 1359
சிம்மம் 03 15 23 42 சிம்மம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிர் தன சம்பத
21.12.2025 வெற்றி வாரம் 0758
P 4 4 8 2 7 6
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.30,991,894.80
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3024
சீட்டிழுப்பு திகதி 2025.12.21 தினம் ஞாயிற்றுக்கிழமை
23 29 37 67 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 83,168,152.00
DLB

சனிதா
திகதி 21.12.2025 வெற்றி வாரம் 5185
32 50 61 68 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 70,305,667.60
DLB

சசிரி
வெற்றி வாரம் 854
சீட்டிழுப்பு திகதி 21.12.2025 ஞாயிற்றுக்கிழமை
01 18 27
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ.2,000,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4736
சீட்டிழுப்பு திகதி 21.12.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
16 43 45 53 மீனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,917,114.40
DLB

லக்பிம
G 27 07 31 48 66
சீட்டிழுப்பு வாரம் 2200
21.12.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.614,573,441.20
DLB

அத கோட்டிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் 2850
சீட்டிழுப்பு திகதி 2025.12.21
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.69,504,662.40
10 28 32 45 S
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு விசேட சலுகை,
16 kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு




CALL - 070 375 0001 / 077 755 4528
திருமுருகன் கொம் ஏநற் 321, K.K.S Road, Jaffna



## விற்பனைக்கு

பொங்கல் அகப்பை
(சிரட்டை)
விற்பனைக்கு உண்டு.

077 210 5286



## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் வசாவிளானில்**
**1 1/2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு**

- இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடிப் பாதையுடன்
- செம்மண் காணி
- நன்னீர் ஊற்று நிலம்
- பலாலி வீதி 150m தூரம்
- வசாவிளான் மத்திய கல்லூரி 250m தூரம்
- குடியிருப்புகள் சூழவுள்ள காணி விற்பனைக்குண்டு

(1827)

**074 029 2338, 076 990 3039**


## பிரதமர் ...

நொச்சிக்கு சென்றிருந்தார்.

காலை கிளிநொச்சி இரணை மடுப்பகுதியில் அமைந்துள்ள மண்டபத்தில், க.பொ.த உயர் தரத்தில் மாவட்ட மட்ட ரீதியில் சாதனையீட்டிய மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக பங்கேற்றிருந்தார்.

தொடர்ந்து கிளிநொச்சியில் நடைபெற்ற பல்வேறு அபிவிருத்தி மற்றும் மக்கள் நலன் சார்ந்த நிகழ்வுகளில் கலந்துகொண்ட பிரதமர் அதன் ஒரு பகுதியாக வரலாற்றுச் சிறப்புமிக்க புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆல யத்திற்குச் சென்று விசேட வழி பாட்டில் ஈடுபட்டிருந்தார்.

ஆலயத்துக்கு வருகை தந்த பிரதமரை ஆலய நிர்வாகத்தின ரும் பொது மக்களும் வரவேற்றனர். அதனைத் தொடர்ந்து ஆலயத் தில் நடைபெற்ற விசேட பூசை வழிபாடுகளில் பிரதமர் பக்திபூர்வ மாகப் பங்கேற்றார்.

வழிபாடுகளைத் தொடர்ந்து, மிகவும் பழமை வாய்ந்த இவ்வால யத்தின் வரலாற்றுப் பின்னணி, ஐதீகங்கள் மற்றும் ஆலயத்தின் சிறப்புக்கள் குறித்து பிரதமர் மிக வும் ஆர்வத்துடன் கேட்டறிந்து கொண்டார்.

இவ்வழிபாட்டு நிகழ்வில் பிரத மருடன் இணைந்து, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாய கன், கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, பாராளுமன்ற உறுப்பினர் க.இளங் குமரன் மற்றும் கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு.முரளிதரன் ஆகியோரும் கலந்து கொண்ட னர்.

இதேவேளை பிரதமரின் கிளி நொச்சி வருகையை முன்னிட்டு தமது பிரச்சினைகளுக்கான தீர் வைப் பெற்றுத் தரக்கோரி கவன யீர்ப்புப் போராட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

குறித்த கவனயீர்ப்புப் போராட் டத்தில் கிராம அமைப்புக்கள், கமக்கார அமைப்புக்கள், பொது மக்கள் என நூற்றுக்கும் மேற்பட்ட வர்கள் கலந்து கொண்டனர்.(ந-7)


## Voyzant இந்தியா கோவில்கள்

- ஆறுபடை வீடு
- திருப்பதி
- திருநாகேஸ்வரம்
- இராமேஸ்வரம்
- சிதம்பரம்
- ஸ்ரீரங்கம்
- வைத்தீஸ்வரன்
- மேல்மருவத்தூர்
- திருவண்ணாமலை
- மதுரை மீனாட்சி
- திருவெண்ணெய்நல்லூர்
- சங்கரப்பாணி
- திருவானைக்கா
- காஞ்சிகாமாட்சி
- ராமர்கோவில்
- திருக்கடவூர்

உட்பட 35 இற்கு மேற்பட்ட கோவில்கள்
189,000/= (ஒரு நபருக்கு) (10 பேர் கொண்ட குழு)
இந்தியா விசா, இருவழி பயணச்சீட்டு மற்றும் குளிரூட்டப்பட்ட போக்குவரத்து — தங்குமிடம்
10 நாட்கள்
மேலதிக விபரங்களுக்கு: Voyzant (PVT) Ltd
புறப்படும் திகதிகள் 29.01.2026, 26.02.2026
No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.(OLR Church இற்கு அருகில்)
077 284 9535, 021 222 6866
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
(6308)



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4643)

076 825 7716 (ஆகாஸ்)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



## Divorce மாப்பிள்ளை தேவை

01.புங்குடுதீவு, இந்து, 1995, உத்திராட்டதி, B.com, Divorce பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. (55922)
02.கண்டி, இந்து, 1996, பூரம், Gradute, Divorce, Canada citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.(54669)
03.புங்குடுதீவு, இந்து, 1990, பூரம், A/L, Makeup Artist, Divorce பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.(51942)
04.புங்குடுதீவு, இந்து, 1990, மூலம், Bsc, Msc (Peradeniya University), Divorce பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.(49953)
05.சுந்தரமடம், இந்து, 1998, சித்திரை, Bsc, Divorce பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.(42960)
06.கொக்குவில், இந்து, 1993, ஆயிலியம், Bsc, finance, Divorce பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. (33221)
07.KKS, இந்து, 1990, ஆயிலியம், Bachlor of science(Hons), Divorce பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. (31451)
08.வல்வெட்டித்துறை, இந்து, 1992, சுவாதி, Bsc computer science, Divorce பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. (55648)
09.கொழும்பு, இந்து, 1997, மிருகசீரிடம், MBA, Bsc, Divorce பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. (28955)
10.கொக்குவில், இந்து, 1994, மகம், A/L, Makeup Artist, Divorce பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. (33425)

நீங்களாகவே எமது website www.thaalee.com இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். (6324)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728
077 803 8193



## பணியாளர் உடன் தேவை

O/L அல்லது A/L படித்த பெண் பணியாளர்கள் தேவை. வெளிநாட்டு பொதிகள் சேவை நிறுவனத்திற்கு பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

- Clerk
- Computer operator

(6350)

077 413 4528



## வேலையாட்கள் தேவை

காட்வெயர் கடைக்கு அனுபவம் உள்ள வேலையாட்கள் தேவை.
சம்பளம்: ரூ.50,000 வரை
(1786)
தொடர்புகளுக்கு:
077 252 3155



## வேலைவாய்ப்பு

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள Village hotel & Indian Restaurant இற்கு சமையல் அனுபவம் உள்ள ஆண்/ பெண் தேவை.
தொடர்புகளுக்கு :
076 830 3931
(6303)



## காணி விற்பனைக்கு

**யாழ். அச்சுவேலியில் காணி விற்பனைக்குண்டு.**

- 34 பரப்புக் காணி இரண்டு பரப்பாய் பிரித்த நிலையில் விற்பனைக்கு உண்டு.
- அச்சுவேலி ரவுனிலிருந்து 400m தூரத்திலும்
- அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்திலிருந்து 200m தூரத்திலும்
- அன்னை திரேசா கொன்மென்ற் பாடசாலையிலிருந்து 200m தூரத்திலும்
- சமுர்த்தி வங்கியிலிருந்து 150m தூரத்திலும்
- நன்னீர் ஊற்று, குடியிருப்பு சூழல், வீடுகள் கட்ட உகந்த காணி.

(6349)

தொடர்பு: 076 253 5683



## மலிவு விலையில்

பாடசாலை மாணவர்களுக்கான




**காலுறைகள்**
மொத்த கொள்வனவுக்கு
விசேட விலைக்கழிவு
(C-4641)
ஸ்ரீமுருகன் No.303, K.K.S Road, Jaffna.



## வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**
# 01 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி. யாழ்ப்பாணம்.
021 222 6113, 076 443 1576

**அருள்ஸ் பிறைவேட் லிமிட்டட்**
# 10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536, 077 657 9349




- அதிவிரைவு பாதுகாப்பு, நம்பகத்தன்மையுடன்.
- 25 வருடங்களாக மக்கள் நம்பிக்கையை வென்ற நிறுவனம்.
- அனுப்பப்படும் பொதிகளுக்கு காப்புறுதி செய்ய வேண்டியதில்லை. முழுப் பெறுமதியையும் எமது நிறுவனம் பொறுப்பேற்கும்.
- உங்கள் வீடுகளுக்கு வந்து ஏற்றுக் கொள்ளப்படும் சேவைக்கு மேலதிக கட்டணம் எதுவும் செய்ய வேண்டியதில்லை.

# 01 தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி. # 01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி. CTB பஸ் டிப்போ எதிரில் பருத்தித்துறை. கொமர்ஷல் வங்கி அருகில் கிளிநொச்சி.
(6345)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் இல. 121, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.12.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org